விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இலைப்பிலைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 29 வெள்ளிக்கிழமை (12.04.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 114

### கடற்படை முகாம் அமைக்க காணி சுவீகரிப்பு

## மண்டைதீவில் மக்களின் எதிர்ப்பால் நில அளவை தடுத்து நிறுத்தம்!



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் கடற்படைக்கு முகாம் அமைப்பதற்கு பொது மக்களுக்கு சொந்தமான 18 ஏக்கர் காணியைச் சுவீகரிக்க நேற்று நடைபெறவிருந்த நில அளவை நடவடிக்கை எதிர்ப்புப் 23

## 19 புதிய அம்புலன்ஸ் வாகனம் வடக்கிற்கு வழங்கப்பட்டது

### யாழ். தேவைக்கு 15 அம்புலன்ஸ்கள்



(கொழும்பு)

வடமாகாணச் சுகாதாரச் சேவையை மேம்படுத்த 19 புதிய அம்புலன்ஸ்வண்டிகளைகையளிக்கும்வைபவம்கொழும்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனா 23

## வரட்சியால் 5 இலட்சம் பேர் நாடு முழுவதும் பாதிப்பு

### அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்

(கொழும்பு)

வரட்சியான காலநிலை காரணமாக நாடு முழுவதும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரி வித்துள்ளது. அந்த வகையில் வரட்சியான காலநிலை 23

# இளவாலையில் துப்பாக்கிச் சூடு!

## கஞ்சா கடத்தலை தடுக்க விசேட பொலிஸ் அணி மேற்கொண்டது

**(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். கஞ்சா கடத்தல்காரர்களை கைது செய்வதற்காகவே இந்த துப்பாக்கிச் சூடு நேற்று இரவு நடத்தப்பட்டுள்ளது. யாழிலிருந்து சென்ற விசேட பொலிஸ் அணியினரே இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டனர்.**

நேற்றிரவு நடந்த இச்சம்பவத்தில் ஒரு தொகை கஞ்சாப் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

மேலும் இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் எத்தனை பேர் காயமடைந்தார்கள், எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள், எத்தனை கிலோ கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது என்ற விபரங்கள் இச்செய்தி அச்சுக்கு போகும் வரையில் கிடைக்கப்பெறவில்லை. (ம-3)

## 140 வருடங்களுக்கு பின்னர் இலங்கையில் அதிக வெப்பம்

### பேராசிரியர் சந்தன ஜயரத்ன

(கொழும்பு)

140 வருடங்களுக்கு பின்னர் பதிவாகியுள்ள அதிக வெப்ப காலநிலை தற்போது நாட்டில் தாக்கம் செலுத்தியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் ஆய்வு பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார். 24

## ஹெரோயினுடன் இளைஞர் வவுனியாவில் கைது

(குருமன்காடு)

வவுனியா கற்குழிப்பகுதியில் நேற்று மதியம் இளைஞன் ஒருவரை ஹெரோயின் போதைப் பொருட்களுடன் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா அபேயவிக்கிரம தலைமையில் கீழ் செயற்படும் 24

## 8கிலோ கஞ்சாவுடன் மாதகல் பகுதியில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் 8 கிலோ 200 கிராம் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் சண்டிலிப்பாய் மாதகல் பகுதியில் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளில் 23

## நிதி அமைச்சர் மங்களவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

### சுதந்திரக்கட்சி கொண்டுவர ஏற்பாடு

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக, எதிரணி நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை பாராளுமன்றில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த அறிவிப்பினை நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடக சந்திப்பிலேயே பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அரசாங்கத்திற்கும் நிதி அமைச்சருக்கும் எதிராக பல முரணான கருத்துக்களை எதிர்க்கட்சி வெளியிட்டு வருகின்றது. 23

### கல்வித்துறையின் தீர்மானங்களை

## புத்திஜீவிகளும், கல்விமான்களுமே மேற்கொள்ள வேண்டும்

### அரசியல்வாதிகள் அல்ல- ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டின் கல்வித்துறை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பினை அரசியல்வாதிகளிடம் ஒப்படைக்காது அதனை நாட்டின் கல்வித்துறை சார்ந்த புத்திஜீவிகளும் கல்விமான்களும் மேற்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பிள்ளைகள் எதிர்கால உலகினை வெற்றிகொள்ளத்தக்க வகையிலும் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் வகையிலுமான தேசிய திட்டமொன்றினை' 24

## பொதுஜன பெரமுனவுடன் சுதந்திரக்கட்சி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தும்

### மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடத்தப்பட உள்ள எந்த தேர்தலிலும் விரிவான கூட்டணியாக போட்டியிடுவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரி... 23

### வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு

## பிரதேச செயலாளர் ஊடாக மணல் வழங்க தீர்மானம்

(கிளிநொச்சி)

வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு பிரதேச செயலாளர் ஊடாக மணல் அனுமதிப்பத்திரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்திலேயே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் 23

## வழக்கு சர்ச்சையில் கோத்தபாய இன்று நாடு திரும்புகின்றார்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீதான வழக்கு தொடர்பான சர்ச்சைகள் காணப்படுகின்ற நிலையில் இன்றையதினம் அவர் நாடு திரும்பவுள்ளார்.

இந்நிலையில் அவரை வரவேற்கும் முகமாக ஆதரவாளர்களால் பல்வேறு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

திருமதி சத்தியபாமா பாலகிருஷ்ணன்



எமது சங்கத்தின் தலைவரும், கைதடி சித்த போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணருமாகிய **திருமதி சைலஜா சிவராஜா** அவர்களின் அன்புத்தாயார் **திருமதி சத்தியபாமா பாலகிருஷ்ணன்** அவர்களின்பிரிவுத்துயரில்பங்கெடுப்ப துடன் அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப்பிரார்த்திக் கின்றோம். (8451)

**அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் - இலங்கை**



## சீரடி பாபா ஆலயம்

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது. சேவை செய்வதற்கு, தங்கி நின்று சேவை செய்வதற்கு தொண்டர்களை அழைக்கின்றோம்.

அதிசயங்களும், சித்துக்களும் செய்து தம்மை பறை சாற்றிக் கொண்டவர் அல்லர் அவர். சுகபோகங்களில் வாழ்ந்து, காரிலும் விமானத்திலும் பறந்தவரல்லர்; பாலும் பழமும் தங்க பஸ்பங்களும் உண்டு வாழ்ந்த வரல்லர்.

ஏழைப் பக்கிரியே அவர். பரம ஏழை. சந்து பொந்து போன்ற வீடுகளில், மனிதர்கள், பிராணிகளை போல அவலமாக வாழ்ந்த ஒரு குக்கிராமத்திலே எளியவர்களுடன் வாழ்ந்தவர்.

**தொடர்புகளுக்கு - சீரடி பாபா ஆலயம்**
**தெல்லிப்பளை வீதி, பெரியவிளான், இளவாலை,**
(8450)
**கண்ணன் : 076 573 2537**


# மண்டைதீவு போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்களுக்கு அச்சுறுத்தல்!

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நேற்று நடத்தப்பட்ட போராட்டத்தின்போது பொதுமக்களை மனரீதியாக அச்சுறுத்தும் வகையில் புல னாய்வு அதிகாரிகள் செயற்பட்டதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். மண்டைதீவில் கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பதற்காக முன்னெடுக்கப்படவிருந்த நில அளவீடு செய்யும் பணிகள் மக்களின் எதிர்ப்பு போராட்டத்தால் தடுத்து நிறுத்தப் பட்டது.

இதன்போதே புலனாய்வாளர்கள் மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதாக சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். போராட்டத் தின்போது பாதுகாப்புக்காக பொலிஸாரும் வரவழைக்கப்பட்டிருந்தனர். பெரிய வாகனங் களும் கொண்டு வரப்பட்டிருந்தன. இதன்போது பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் புலனாய்வாளர்கள் காணொளி எடுப்பது. செய்தி சேகரிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்றார். (ம-3)


## பண்ணை அலுவலர் தேவை

மாவிட்டபுரத்தில் இயங்கும் விவசாயப் பண்ணைக்கு வெளி வேலைகளைக் கவனிப்பதற்கும், உற்பத்தி களைச் சந்தைப்படுத்துவதற்கும், பண்ணைக்கு உள் வேலை செய்வதற்கும் தகுதியான ஒருவர் தேவை.

**தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.**
**திருநாவுக்கரசு ஞாபகார்த்த மாதிரிப்பண்ணை**
**மாவிட்டபுரம்.** (8445)
**தொ.பே.இல : 077 172 6583**



**ஆரோக்கிய வாழ்வுக்கான இயற்கை உணவு உற் பத்தி விற்பனை நிலையம் திறப்பு விழா.**

காலம் : இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
திறந்து வைப்பவர்: Dr G.ஸ்ரீதரன் BSM (S.L).M.PHILL (JAFFNA) & J.P
இடம் : இலங்கை முதியோர் சுகவாழ்வு கழகம்.
தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் கோவில் முன்பு.

இயற்கை முறை உணவு உற்பத்திகள் விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்படும்.

உற்பத்தியாளர்கள், சந்தைப்படுத்த விரும்புபவர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.

கடந்த வருடத்தில் எமது முதியோர் சங்கத்தினால் பாராட்டப்பட்ட வட மாகாணத்தில் 90, 100 வயதுக்கு மேற்பட்டவர்கள் விவரங்கள் அடங்கிய முதியோர் மலர் உட்பட சஞ்சிகைகள் எமது நிலையத்தில் விற்பனைக்கு உண்டு.

**இலங்கை முதியோர் சுகவாழ்வு கழகம்**
**தலைவர் : 077 606 8656**
**செயலாளர் : 077 663 6596**
**நிலையம் : 021 205 9256**
(8447)



## தரமான பிளாஸ்ரிக் வாளிகள் விற்பனைக்குண்டு

20 kg அச்சகமைபொதிசெய்யப் பட்ட தரமான வெற்றுப் பிளாஸ் ரிக் வாளிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக் குண்டு.

**070 220 2206**



## சலூன் விற்பனைக்கு

பலாலி வீதி, உரும்பிராய் சந்தியில் உள்ள சலூன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 077 615 4235** (8432)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 15.03.2019 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சுப்பிரமணியம் இராசரத்தினம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கருநாட்டுக் கேணியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது துயரின் போது வீட்டுக்கு வருகை தந்தும், தொலைபேசியூடாகவும் ஆறுதல் கூறி எம்மைத் தேற்றியவர்கள், துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் மூலம் தமது அனுதாபங்களை வெளிப்படுத்தியோர், அஞ்சலி உரையாற்றியோர், மலர் தூவி அஞ்சலி செலுத்தியோர், இறுதி ஊர்வலத்தின் போது கலந்து கொண்டோர் துயரின்போது உணவு, தேநீர் வழங்கியோர் மற்றும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**கருநாட்டுக்கேணி, கொக்கிளாய்.** (C-6067) **077 375 0371, 077 310 1027** **தகவல்: குடும்பத்தினர்**



## மரண அறிவித்தல்

திருமதி **சோமசேகரம் சாந்தகுணேஸ்வரி** (செல்லக்கிளி)

*பிறப்பு : 17.05.1944* *இறப்பு : 10.04.2019*



வல்வெட்டித்துறையை பிறப்பிடமாக வும் கொண்டக்கட்டை அ.மி.த.க பாடசாலை ஒழுங்கையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சோமசேகரம் சாந்தகுணேஸ்வரி (செல்லக்கிளி) 10.04.2019 புதன்கிழமை அன்று கால மானார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி சோமசேகரம் (ஓய்வுபெற்ற தபாலதி பர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வமாணிக்கம் - வள்ளிக்கண்டு ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தசாமி - தங்கம்மா ஆகியோரின் அன்புமரு மகளும், லக்ஷ்மிதேவி, காலஞ்சென்ற மகாலக்ஷ்மி, அக்ல்யலெட்சுமி, ஏகாந்தன், கிருத்திகா ஆகியோரின் அன்புத் தாயாரும், நீதிராஜா, வாமதேவன், திருத்தேவி, செல்வச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சபேசன் - சதானந்தி, வர்ணன் - தர்சியா, வாகீசன் - சுகன்யா, நிதர்சனா, நிரோஜன், நிலானியா - மயூரன், பிரணவன், மயூரி, மகிழினி, நிரந்தரிகா, சரண் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், கவினாஸ், வர்ஷித், ராகவி, அனன்யா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**அ.மி.த.க பாடசாலை ஒழுங்கை, வல்வெட்டித்துறை.** (C-6066) **தகவல் : குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டைதீவில் கடற்படைக்கு முகாம் அமைப்பதற்காக பொது மக்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் காணியைச் சுவீகரிக்க நேற்று நடைபெறவிருந்த நில அளவை நடவடிக்கை எதிர்ப்பு போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது. நேற்றுக்காலை 9 மணியளவில் மண்டைதீவு கிழக்கு அம்மன் கோவிலுக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

### எந்தத் தேர்தலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் வரலாம்

# முன்னெப்போதும் இல்லாத தளம்பல் நிலையில் நாடு!

## முன்னாள் முதல்வர் நஸீர் சுட்டிக்காட்டு

(ஏறாவூர்)

எந்தத் தேர்தலும் எந்த சந்தர்ப்பத்திலும் வரலாம் என்கின்ற தளம்பல் நிலையில்தான் நாடு முன்னெப்போதும் இல்லாத வகையில் தற்போது தடுமாறிக் கொண்டிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும் முன்னாள் முதல்வருமான நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வரவு - செலவுத்திட்ட விடயங்கள் முடிந்தவுடன் அடுத்து வருகின்ற ஓரிரு மாதங்களுக்குள் நாட்டின் எந்தவொரு அரசியல் தலைமைகளும் தேர்தலை நோக்கி நகர்வார்களே தவிர வேறு வேலை அவர்களுக்கு இருக்காது. அது மாகாண சபைத் தேர்தலாகவோ, பாராளுமன்றத் தேர்தலாகவோ, ஜனாதிபதித் தேர்தலாகவோ இருக்கலாம்.

இதுவரை காலமும் நாங்கள் நம்பியிருந்த அரசியல் தலைமைகள் சாதித்தவைகளைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக சந்தி கிழிக்கப்படப் போகின்ற காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. ஏமாற்று அரசியலில் இருந்து விடுபட வேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை. எத்தனை காலம் தான் இவர்களால் இந்த ஏமாற்று அரசியலை தொடர்ச்சியாக நடத்திச் செல்ல முடியும்?

அரசியலில் 25, 30 வருடங்களாக இருந்து வருகின்றோம் என்று பிதற்றித் திரிகின்ற அரசியல்வாதிகள் இனி மக்களை ஏமாற்ற முடியாது என்பதை எதிர்வருகின்ற அரசியல் களம் நன்கு உணர்த்தும். இவர்கள் சமூகத்திற்குத் தொடர்ந்தும் துரோகத்தையே செய்து வந்திருக்கின்றார்கள்.

பாராளுமன்றத்திலே தங்களுக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை பாதிக்கப்பட்டுப்போயுள்ள சிறுபான்மை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்த இந்த பழுத்த அரசியல் தலைமைத்துவங்கள் தவறி விட்டன. வரவு-செலவுத் திட்ட விவாத சந்தர்ப்பத்திலே சிறுபான்மை சமூகத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடிய கலப்பு முறையிலமைந்த மாகாண சபைத் தேர்தலை விகிதாசார முறையிலே நடத்துங்கள் என்று பேரம் பேச எந்த சிறுபான்மைச் சமூக அரசியல்வாதிக்கும் வக்கில்லாமல் போய் விட்டது. இது வருந்தத்தக்கது.

இந்த இலட்சணத்தில் இவர்கள் கால்நூற்றாண்டு அல்லது அதற்கும் கூடுதலாக அரசியல் அனுபவம் பெற்றிருக்கின்றோம் என்று கூறுவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது. குரல் கூட கொடுக்க முடியாத அரசியல் வங்கு ரோத்தில் தான் முஸ்லிம் சமூக அரசியல் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆகவே, பாதிக்கப்படும் சமூகத்துக்காக உரிய இடங்களில் குரல் கூடக் கொடுக்க முடியாத அரசியல் தலைமைகளால் எப்படி வீதியில் இறங்கி உரிமைக்காகப் போராட முடியும்? மாகாண சபைத் தேர்தல் இல்லாமல், அங்கு மக்களாட்சி இல்லாமல் இருக்கின்ற விடயம் இப்பொழுது சிறுபான்மைச் சமூகங்களுக்குப் பாரிய பாதிப்பாக இருந்தும் அதுபற்றி வாயே திறக்காத அரசியல் தலைமைகளை சமூகக் காவலர்கள் என்று எப்படி நம்பிக் கொண்டிருக்க முடியும்?

மாகாண சபைகள் இயங்காததைத் தொடர்ந்து அபிவிருத்திகளோ முன்னேற்றங்களோ இல்லாது ஸ்தம்பித்து போன மாகாணங்களாகவே அவை நகர்ந்து கொண்டிருக்கின்றன.

முஸ்லிம் சமூக அரசியல் ஒரு சிறு விடயத்தைக் கூட பாராளுமன்றத்திலே சாதிக்க முடியாத நிலைமையை எண்ணி வருத்தப்பட வேண்டியுள்ளதோடு இதனை மாற்றியமைக்க வேண்டியது பற்றி சமூகம் விரைவாகச் சிந்திக்க வேண்டும்.

இல்லாவிட்டால் இந்த நாட்டில் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் உத்தரவாதம், உரிமைகள், பாதுகாப்பு, இருப்பு என்பன கேள்விக் குறியாகிவிடும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### 3 கோடியே 20 இலட்சம் பெறுமதியான

# தங்கம் கடத்த முற்பட்ட நபர் விமான நிலையத்தில் கைது



(கொழும்பு)

சட்டவிரோதமாக தங்கம் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் விமான நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பணி புரியும் நபர் ஒருவரிடமிருந்து குறித்த தங்க பிஸ்கட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த நபர் தனது காலுறைகளைப் பயன்படுத்தி தனித்தனியாக பொதி செய்து விமான நிலையத்திலிருந்து வெளியே கொண்டுவர முற்பட்ட போது அவரிடமிருந்து 40 தங்க பிஸ்கட்டுக்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட தங்கம் சுங்கப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு குறித்த தங்க பிஸ்கட்டுக்களின் பெறுமதி மூன்று கோடியே இருபது இலட்சம் ரூபாவென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வத்தளையைச் சேர்ந்த 23 வயதுடைய நபரென பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மின்சார நெருக்கடியைத் தீர்க்க மற்றுமொரு திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

மின்சார நெருக்கடியைத் தீர்க்க மற்றுமொரு திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அந்த வகையில், எதிர்வரும் ஓகஸ்டில் உமா ஓயா மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார். இந்த மின்னுற்பத்தி நிலையத்தின் மூலம் 120 மெகா வோட்ஸ் மின்வலுவை உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தில் மேலும் பல மின்னுற்பத்தித் திட்டங்கள் அமுலாகவுள்ளன. இதன்மூலம் மின்சார நெருக்கடிக்குத் தீர்வு காணப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

உமா ஓயா மின்வலு உற்பத்தி நிலையம் பிரத்தியேகமானது. இது நிலத்தின் கீழ் அமைந்துள்ள மின்னுற்பத்தி நிலையமாகும்.

உலகில் இது போன்ற மின்னுற்பத்தி நிலையங்கள் மிகவும் குறைவு. உமா ஓயா திட்டத்தின் மூலம் இரு போகங்களிலும் 6 ஆயிரம் ஹெக்டெயர் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளலாம் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும மேலும் தெரிவித்தார். (இ-7)

# துறைமுக நகரில் 80 ஆயிரம் வேலைவாய்ப்புக்கள்-சம்பிக்க



(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாக தெரிவித்துள்ள மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, நாட்டை விட்டு வெளி யேற உள்ள துறைசார் நிபுணர்கள் 80 ஆயிரம் பேருக்கு அந்நகரில் வேலைவாய்ப்பு வழங்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

துறைமுக நகரை நிர்வகிக்க கொழும்பு மாநகர சபையல்லாத ஒரு தனி அமைப்பு அமைக்கப்படும். அதற்கான சட்ட மூலங்கள் தயாரிப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, 269 ஹெக்டேயர் பரப்பைக் கொண்டுள்ள துறைமுக நகரப் பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கான தனியானதொரு தேர்தல் தொகுதியும் அமைக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சான்ட்னர் சிக்ஸர்: சென்னை சுப்பர்

## இறுதிப் பந்தில் வீழ்ந்தது ராஜஸ்தான்



ராஜஸ்தானுக்கு எதிரான பிரிமியர் போட்டியில் கடைசி பந்தில் சான்ட்னர் சிக்சர் அடிக்க சென்னை அணி 4 விக் கெட் வித்தியாசத்தில் 'திரில் வெற்றி பெற்றது. அம்பதி ராயுடு. தோனி அதிரடியாக அரைசதம் அடித்து கைகொடுத்தனர்.

இந்தியாவில் பிரிமியர் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. நேற்று 25வது லீக் போட்டி ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நடந்தது. இதில் சென்னை, ராஜஸ்தான் அணிகள் மோதின. நாணயச்சுழற்சி யில் வென்ற சென்னையின் தலைவர் தோனி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

சென்னை அணியில் ஹர்பஜன், ஸ்காட்டிற்குப்பதில் சான்ட்னர், ஷர்துல் தாகூர் வாய்ப்பு பெற்றனர். ராஜஸ்தான் அணியில் பிரசாந்த் சோப்ரா, கிருஷ் ணப்பா கவுதம், மிதுன் நீக்கப்பட்டு சாம்சன், ரியான் பராக் (அறிமுகம்), உனத்கட் இணைந்தனர்.

**ரகானே ஏமாற்றம்**

ராஜஸ்தான் அணிக்கு பட்லர், அணித் தலைவர் ரகானே ஜோடி ஆரம் பம் வழங்கியது. முதல் ஓவரிலேயே பட்லர் 'வேகம்' காட்டினார். தீபக் சகார் பந்துவீச்சில் இவர் ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார். சான்ட்னர் ஓவரில் ரகானே தொடர்ந்து இரண்டு பவுண்டரி அடித்தார். மீண்டும் வந்த சகார் இந்த விளாசலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இவரது 'வேகத்தில்' ரகானே (14) ஆட்ட மிழந்தார். ஷர்துல் தாகூரின் பந்துவீச் சில் பட்லர் 'ஹட்ரிக்' பவுண்டரி அடித தார். அடுத்த பந்தில் ராயுடுவிடம் 23 ஓட்டங்களில் 'பிடி' கொடுத்தார் பட்லர். இருப்பினும் ராஜஸ்தான் அணி 5 ஓவரில் 53/2 ஓட்டங்களைக் குவித்தது.

**பந்துவீச்சாளர்கள் அசத்தல்**

இதன் பின் சென்னை பந்துவீச்சாளர் கள் எழுச்சி பெற்றனர். நடப்பு சீசனில் சதம் விளாசிய சாம்சன் மீது எதிர்பார்ப்பு அதிகமாக இருந்தது. ஆனால், இவர் சான்ட்னர் சுழலில் சிக்கி 6 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத் தார். இதன்பின், விக்கெட் சரிவை தடுத்து நிறுத்த, துடுப்பாட்ட வீரர்கள் மந்தமாக விளையாடினர்.

7, 8வது ஓவர்களில் மொத்தம் 10 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட, அணி யின் ஓட்டவேகம் குறைந்தது. இந்நிலை யில் ஜடேஜா 'சுழலில்' திரிபாதி (10) சரிந்தார். மீண்டும் மிரட்டிய ஜடேஜா இம்முறை ஸ்மித்தை (15) அவுட்டாக்கி உள்ளூர் ரசிகர்களை வெறுப்பேற் றினார். இது ஐ.பி. எல்., அரங் கில் இவர் கைப்பற்றிய 100ஆவது விக்கெட்டாக அமைந்தது.

மறுபக்கம் தாகிர் பந்து வீச்சில் ரியான் பாரக் இரண்டு பவுண்டரி அடித்தார். இருப்பி னும், தாகூர் பந்தில் இவர் 16 ஓட்டங்களில் ஆட்டமி ழந் தார். கடைசி நேரத்தில் வேகம் காட்டிய ஸ்ரோக் சை (28), சகார் போல்டாக்கி னார்.ஷர்துல் தாகூர் வீசிய போட்டியின் கடைசி ஓவ ரில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட 18 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

20 ஓவர்களில் ராஜஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்கள் எடுத்தது. ஸ்ரேயாஸ் கோபால் (19), ஜோப்ரா ஆர்ச்சர் (13) ஆட்டமிழக்கா மல் இருந்த னர். சென்னை அணி சார் பில் ஜடேஜா 2, சகார் 2, ஷர்துல் தாகூர் 2 விக்கெட்டுக் களைச் சாய்த்தனர்.

**திணறல் ஆரம்பம்**

சென்னை அணிக்கு வோட்சன், டு பிளசி ஜோடி துவக்கம் கொடுத்தது. முதல் ஓவரை வீசிய குல்கர்னி, வோட்சனை (0) போல் டாக்கினார். வந்த வேகத்தில் பவுண்டரி அடித்த ரெய்னா (4) வீணாக ரன் அவுட்டானார். டு பிளசி (7) ஏமாற் றினார். கேதர் ஜாதவும் (1) சொதப்ப, சென்னை அணி 6 ஓவ ரில் 24/4 ஓட்டங்கள் என திண றி யது. **இரண்டு அரைசதம்**

தோனி, அம்பதி ராயுடு இணைந்தனர். குல்கர்னி பந்தை ராயுடு சிக்சருக்கு அனுப்ப, தோனி தன் பங்கிற்கு கோபால், பராக் பந்துகளில் சிக்சர் அடித்தார். திடீரென ஓட்ட வேகம் மந்தமாக, 16, 17வது ஓவரில் 12 ஓட்டங் கள் மட்டும் எடுக்கப்பட்டன.

கடைசி 18 பந்துகளில் 39 ஓட்டங்கள் தேவை ஏற்பட சென்னை ரசிகர்களுக்கு 'டென்ஷன்' எகிறியது. இத்தொடரில் முதன் முறையாக அரைசதம் எட்டிய அம்பதி ராயுடு 57 ரன் னுக்கு அவுட்டானார். தோனி 22வது ஐ.பி.எல்., அரைசதம் எட்டினார். கடைசி ஓவரில் 18 ஓட்டங்கள் தேவைபட்டன.

**'டென்ஷன்' வெற்றி**

ஸ்ரோக்ஸ் வீசிய முதல் பந்தில் ஜடேஜா சிக்சர் அடித்தார். 'நோபோல்', 'பிரீ ஹிட்' ஆக வந்த 2வது பந்தில் 4 ஓட்டங்கள் எடுக்கப் பட்டன. 3வது பந்தில் தோனி (58) போல்டானார். அடுத்த இரு பந்தில் சான்ட்னர் 2, 2 என 4 ஓட்டங்கள் எடுத்தார். கடைசி பந்தில் 4 ரன் தேவை என்ற நிலையில் ஸ்ரோக்ஸ் 'வைட்' வீச, சென்னை வெற்றிக்கு 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இம்முறை சான்ட்னர் 'சுப்பராக' ஒரு சிக்சர் அடிக்க, சென்னை அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 155 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சான்ட்னர் (10), ஜடேஜா (9) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

**100**

ராஜஸ்தான் வீரர் ஸ்மித்தை ஆட்டமிழக்கச் செய்த சென்னையின் ஜடேஜா ஐ.பி.எல், தொட ரில் 100ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்.

◆ தவிர இந்த மைல்கல்லை எட்டிய முதல் இடது கை சுழற்பந்து வீச்சாளர் ஆனார் ஜடேஜா. அடுத்த இடங்களில் பிரக்யான் ஓஜா (89), அக்சர் படேல் (64), சகிப் அல் ஹசன் (58) உள்ளனர்.




# கெத்து காட்டுமா கொல்கத்தா!

## டில்லியுடன் இன்று ஈடன் கார்டனில் மோதல்

ஐ.பி.எல்., தொடருக்கான லீக் போட்டியில் கொல்கத்தா, டில்லி அணிகள் மோதுகின் றன. இதில் கொல்கத்தா அணி அபார ஆட் டத்தை வெளிப்படுத்தினால், சமீபத்தில் டில்லியிடம் கண்ட 'சுப்பர் ஓவர்' தோல்விக்கு பதிலடி கொடுக்கலாம்.

இந்தியாவில், 12ஆவது பிரிமியர் கிரிக் கெட் தொடர் நடக்கிறது. இதில் 'நடப்பு சம்பி யன்' சென்னை, மும்பை, பஞ்சாப் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்கின்றன.

கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் இன்று நடக்கவுள்ள லீக் போட்டியில்கொல்கத்தா அணி, டில்லிஅணியை எதிர்கொள்கிறது. சமீபத்தில் டில்லியில் நடந்த இவ்விரு அணிகள் மோதிய போட்டி 'சமன்' ஆனது. பின், 'சுப்பர் ஓவரில்' டில்லி அணி வெற்றி பெற்றது.

**ரசல் ஆறுதல்**

கொல்கத்தா அணி, இதுவரை விளையா டிய 6 போட்டிகளில், 4 வெற்றி, 2 தோல் வியை பெற்றது. சமீபத்தில் சென்னையில் நடந்த போட்டியில் சென்னை அணியிடம் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்விய டைந்தது. இப்போட்டியில் 'ரொப் ஓர்டரில்' ஏமாற்றிய கிறிஸ் லின், சுனில் நரைன், ரொபின் உத்தப்பா, நிதிஷ் ராணா எழுச்சி பெற வேண்டும். இதுவரை பெரிய அளவில் சோபிக்காத அணித் தலைவர் தினேஷ் கார்த்திக், சுப்மன் கில் 'நடுத்தரவரிசையில்' ஓட்ட வேட்டை நடத்த வேண்டும். சென் னைக்கு எதிராக அரைச்சதமடித்து ஆறுதல் கொடுத்த 'சகலதுறை வீரர்' ஆன்ட்ரே ரசல் மீண்டும் கைகொடுக்கலாம்.

**'சுழல்' நம்பிக்கை**

வேகப்பந்துவீச்சில் ஆன்டரே ரசல் (5 விக்கெட்) நம்பிக்கை அளிக்கிறார். இவருக்கு பெர்குசன், பிரசித் கிருஷ்ணா ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். 'சுழலில்' பியுஸ் சாவ்லா (4 விக்கெட்), குல்தீப் யாதவ் (3), சுனில் நரைன் (3) கூட்டணி அசத்த காத்திருக் கிறது. சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர் கள் முன்னிலையில் கொல்கத்தா அணியி னர் சிறப்பாக விளையாடினால், சமீபத்தில் டில்லியிடம் கண்ட தோல்விக்கு பதிலடி கொடுக்கலாம்.

**ஸ்ரேயாஸ் அபாரம்**

டில்லி அணி இதுவரை விளையாடிய 6 போட்டியில், 3 வெற்றி, 3 தோல்வியை பெற் றது. 'சுப்பர் ஓவரில்' கொல்கத்தாவை வீழ்த் திய உற்சாகத்தில் களமிறங்கும் டில்லி அணி, சமீபத்தில் பெங்களூர் அணியை அதன் சொந்த மண்ணில் 4 விக்கெட்டுக்கள் வித் தியாசத்தில் வென்றது.

துடுப்பாட்டத்தில் ஸ்ரேயாஸ் ஐயர் (215 ஓட்.,), ரிஷாப் பன்ட் (176), பிரித்வி ஷா (169), ஷிகர் தவான் (152), கொலின் இங்ராம் (124) நம்பிக்கை அளிக்கின்றனர்.

வேகப்பந்துவீச்சில் 'யோர்க்கர்' ரபாடா (11 விக்கெட்) மிரட்டுகிறார். இவருக்கு கிறிஸ் மோரிஸ் (6), இஷாந்த் சர்மா (4) கைகொடுத் தால் விக்கெட் வேட்டை நடத்தலாம். அமித் மிஸ்ரா (3 விக்கெட்), அக்சர் படேல் (3), சந் தீப் லமிச்சானே (5) ஆகியோர் 'சுழல் ஜாலம்' காட்டினால் மீண்டும் வெற்றி பெறலாம்.

**22 போட்டிகள்**

ஐ.பி.எல்., கிரிக்கெட் அரங்கில் டில்லி, கொல்கத்தா அணிகள் 22 முறை மோதியுள்ளன. இதில் கொல்கத்தா 13, டில்லி 8ல் வென் றன. இந்த சீசனில் இவ்விரு அணி கள் மோதிய போட்டி 'சமன் ஆனது. பின்.சுப்பர் ஓவரில்' டில்லி அணி வென்றது.ஐ.பி.எல்., கிரிக்கெட் அரங் கில் டில்லி, கொல்கத்தா அணிகள் 22 முறை மோதியுள்ளன. இதில் கொல்கத்தா 13, டில்லி 8ல் வென் றன. இந்த சீசனில் இவ்விரு அணி கள் மோதிய போட்டி [illegible] ஓவரில்' டில்லி அணி வென்றது.

# போனதே...போனதே...

## அஸ்வின் புலம்பல்

'மும்பை அணிக்கு எதிரான போட்டியில் இன்னும் சற்று துல்லியமாக செயற்பட்டு இருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்," என பஞ்சாப் அணித் தலைவர் அஷ்வின் தெரி வித்தார்.

மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த பிரிமியர் போட்டியில் பஞ்சாப், மும்பை அணிகள் மோதின. இதில் பஞ்சாப் அணியின் (197/4) இலக்கைத் துரத்திய மும்பை அணி (198/7), கடைசி பந்தில் வெற்றி பெற்றது.

இதுகுறித்து பஞ்சாப் அணித் தலைவர் அஷ்வின் கூறியதாவது,

ஆரம்ப வீரர் கெய்ல் (வயது - 39), முதுகுப்பகுதி தசைப்பிடிப்பு காரணமாக அவதிப்படுகிறார். இதுகுறித்து சோதனை செய்ய உள்ளோம். வரும் நாட்களில் இது எந்தளவுக்கு சரியாகிறது என தொடர்ந்து கண்காணிப்போம்.

வேகப்பந்து வீச்சாளர் ராஜ்புத் முதல் ஓவரின் போது கைவிரலில் காயம் அடைந் தார். இருப்பினும் 'பவர் பிளேயில்' இவர் மூன்று ஓவர்கள் வீசியது எங்களது பெரிய 'போனஸ்'தான். மற்றபடி களத்தடுப்பு செய்வ தில் அணியில் ஏற்றம் இறக்கங்கள் காணப் படுகின்றன.

மும்பை அணிக்கு எதிராக ஆரம்பத்தில் வேகமாக ஓட்டங்கள் சேர்த்தோம். இடை யில் சில ஓவர்களில் குறைவான ஓட்டங்கள் எடுத்து விட்டோம். இருப்பினும் நாங்கள் எடுத்த ஓட்டங்கள் வெற்றிக்கு போதுமானது தான் என நினைத்தேன்.

ஆனால் மும்பை அணியின் துடுப்பாட் டத்தின்போது 10 ஓவருக்குப் பின் வேகமாக ஓட்டங்கள் சேர்த்தது. பஞ்சாப் பந்துவீச்சாளர் கள் சிறப்பாக செயற்பட்டு ஆறுதல் கொடுத்த போதும், கடைசியில் பொலார்ட் அதிரடி விளாசல் போட்டியை எங்களிடம் இருந்து கொண்டு சென்று விட்டது. எங்களது திட்டத்தை முழு அளவில் இன்னும் துல்லி யமாக செயல்படுத்தி இருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம். இவ்வாறு அஷ்வின் கூறினார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி. அமுதரத்தினம் (அமுதா) கணேசமூர்த்தி



அன்னை மடியில்
1952 - 11 - 14

ஆண்டவன் அடியில்
2013 - 03 - 19

ஆண்டுகள் ஆறு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு
எம் ஊனோடும் உணர்வோடும்
ஒன்றாய்க் கலந்த உத்தமியே!
வேரூடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்!
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்!
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த அம்மாவே!
சேயர் நாம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங் கண்களுடன் நிதமுமைப் போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ! நிம்மதியைத் தாராயோ!
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

திதி-12.04.2019
பூர்வபக்க அட்டமி

இல.14, கோவிலாக்கண்டி,
நாவற்குழி கிழக்கு, கைதடி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(8407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகம்பனையில் புத்தாண்டு விளையாட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு கருகம்பனை தமிழ் மன்றமும் சனசமூக நிலையமும் இந்து இளைஞர் கழகமும் இணைந்து நடத்தும் சித்திரைப் புத்தாண்டு விழா நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தலைவர் சோ.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) சு. முரளிதரன், கௌரவ விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் திருமதி. வினோதினி ஸ்ரீமேனன், தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி.சிவபாலன் மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் உடுகம சூரிய ஆகியோர் கலந்து கொள்வர். (5-104)

# விவசாயத்துறையை ஊக்குவிப்பதற்கு 49.459 மில்.செலவில் 29 திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விவசாய அமைச்சால் யாழ்.மாவட்ட விவசாயத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு பிரதி மாகாணத் திணைக்களத்தினால் 49.459 மில்லியன் ரூபாய் செலவில் இவ் வருடம் (2019) 29 பயனுள்ள திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நல்லூர், கோப்பாய், சாவகச்சேரி, காரைநகர், தெல்லிப்பழை, கரவெட்டி, உடுவில், பருத்தித்துறை, சங்கானை, வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள விவசாயிகள் மற்றும் விவசாயப் பயிற்சி நிலையங்களை ஒன்றிணைத்து அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

பாரம்பரிய விவசாய முறையினை நவீனத்துவப்படுத்தும் முயற்சி மூலம் விவசாயத் துறையையும் விவசாயிகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் விவசாயத் தொழில்நுட்பங்களையும் பயிர்ச்செய்கை முறைகளையும் பின்பற்றுதல் இதன் நோக்கமாகும்.

இத் திட்டத்தில் வலை வீட்டு மரக்கறிச் செய்கை, வெங்காயச் சேமிப்புக் கொட்டில்கள், காளான் செய்கை, பப்பாசிச் செய்கை, சொட்டு நீர்ப்பாசனச் செய்கை, உவர்நீர் நெற் செய்கை, இராசவள்ளி உற்பத்தி ஊக்குவித்தல், புகையிலை மாற்றுப் பயிர், கைவிடப்பட்ட நிலங்களில் பயிர்ச் செய்கை ,தேனீ வளர்ப்பு, சேதன மரக்கறி செய்கை , சூரிய சக்தி நீர் இறைக்கும் இயந்திரம் போன்ற 29 வகையான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (5-10)

# பிள்ளைகள் வெளிநாட்டில் தனிமையிலிருந்த தந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

தனிமையில் வாழ்ந்து வந்த வயோதிபர் உடல் நலக் குறைவால் நேற்று முன்தினம் புதன் கிழமை மரணமடைந்துள்ளார்.

கொடிகாமம் கச்சாய் தெற்குப் பகுதியைச் சேர்ந்த இ.இராசரத்தினம் (வயது-84) என்ற முதியவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது, வெளிநாடுகளில் பிள்ளைகள் வசிக்கும் நிலையில் அயலவரின் உதவியுடன் தனிமையில் வசித்து வந்த முதியவர் சில நாட்களாக சுகயீனம் அடைந்த நிலையில் காணப்பட்டார்.

கடந்த புதன்கிழமை நோய் காரணமாக சுய நினைவின்றிக் காணப்பட்ட முதியவரை சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-10)

# இரத்ததான முகாமும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சமாதான நீதவான்கள் சங்கமும் காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இரத்ததான முகாமும் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை தலைவர் லயன்ஸ் கலாநிதி பி. ஜெயவிந்தன் தலைமையில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள லயன்ஸ் கழக மண்டபத்தில் நடைபெறும். (5)

# ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய 79 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய 79 ஆவது ஆண்டு விழா இறுதி நாள் நிகழ்வுகள் நாளை மறுதினம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.30 மணியளவில் தலைவர் ச.யசிகரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எச்.எம்.குணதிலக, சங்கானை சைவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியரும் பாராளுமன்ற உறுப்பினர்களின் இணைப்பாளருமான செ.பிரதாப், கௌரவ விருந்தினர்களாக சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு மதி.நோபேட் யூலியன் ஜெயமாலினி, ஓய்வுநிலை அதிபர் வி.சிவஞானபோதன், ஓய்வு நிலை அதிபர் க.சந்திரசேகரம், நிலையப் போசகர் இ.வசந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (5-7)

# பண்டிகைக்கால கடைகள் அமைப்பதை நிறுத்த வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பண்டிகைக்கால தற்காலிக கடைகள் அமைத்தல் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாநகர சபை அமர்வின் போது பண்டிகைக்கால கடைகள் யாழ்ப்பாண வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு அவர்கள் சிபார்சு செய்யும் நபர்களுக்கு கடைகள் வழங்க முடியுமென ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

எனினும் பண்டிகைக்கால தற்காலிக கடைகள் தொடர்பாக யாழ்.மாநகரசபை முதல்வரும் அங்கத்தவர்களும் யாழ்.வணிகர் கழகத்துடன் நட்புறவான ஒரு கலந்துரையாடலை நடத்தி அதில் எமது பிரதேச மக்கள் பாதிக்காதவாறு ஒரு தீர்க்கமான முடிவை எட்டி எமக்கிடையே ஒரு முரண்பாட்டை வளர்க்காது நெருக்கமான நட்புறவை வளர்ப்பதே சாலச்சிறந்தது எனவும் இவ் இணக்கப்பாடு எட்டும் வரை பண்டிகைக்கால தற்காலிக கடைகள் அமைப்பது என்ற முடிவை இடைநிறுத்தி வைக்குமாறு யாழ். வணிகர்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (5)

# மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் திட்டங்கள்

## சாவகச்சேரி பிரதேச சபையில் ஆரம்பம்

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி சபைகளில் மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் அத்திட்டத்திற்கான மக்களின் முன்மொழிவுகளை வட்டார ரீதியாகக் கேட்டறிந்து வாக்குகளின் அடிப்படையில் மக்களின் தேவைகள் முன்னுரிமைப்படுத்தப்படவுள்ளன. 17 வட்டாரங்களைக் கொண்ட சாவகச்சேரி பிரதேசசபை மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நேற்று வியாழக்கிழமை வரணி மற்றும் நாவற்காடு ஆகிய வட்டாரங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக ஏனைய வட்டாரங்களிலும் மக்களின் முன்மொழிவுகளை எதிர்வரும் 25 ஆம் திகதி பெற்று அவற்றைத் தொகுத்து உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரதேசசபை ரீதியாக இரு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

கிராம அபிவிருத்தியே ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி. பிரதேச அபிவிருத்தியின் பெரும் பங்கு பொதுமக்களையே சாரும். அதன் காரணமாகவே பிரதேச அபிவிருத்தியில் பொதுமக்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு திட்டத்திலும் பொதுமக்களின் பங்களிப்பு இருந்தால் தான் அது நிலைபேறான, நீடித்த அபிவிருத்தி ஆகும். மக்களின் தெரிவின் பெயரில் அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது மக்கள் அந்த அபிவிருத்தியை பேணிப் பாதுகாப்பார்கள் என அவர் தெரிவித்தார். (5-30)

# மத்தியஸ்த சபை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மத்தியஸ்த சபை அமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடைபெற மாட்டாது. அதற்குப் பதிலாக எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

வழமைபோல் அமர்வு மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் இடம்பெறும் என்று தவிசாளர் சி.நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (5)

# இராசி பலன்

**12.04.2019**

பங்குனி 29, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

சப்தமி முற்பகல் 10.48 மணிவரை

திருவாதிரை முற்பகல் 7.35 மணிவரை

சுபநேரம் 6.06-7.36 மணிவரை

இராகுகாலம் 10.36-12.06 மணிவரை

மகாஷ்டமி

வளவன்

கிரகநிலை: சூரி, புத; செவ்; ராகு சந்; சுக்; சனி, குரு, கேது

சந்திராஷ்டமம் பூராடம் இரவு 12.30 மணிக்கு கட-சந்

**மேடம்**: ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்**: வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், ஆனந்தமான நாள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**: வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஆதரவு பெருகும், எப்படி நடக்குமென நினைத்த காரியம் நல்லதாக அமையும்.

**கடகம்**: அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், 'பணப் புழக்கம் அதிகரித்தாலும் அடுத்தடுத் செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி**: திறமைகள் வெளிப்படும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்**: பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ,தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்**: எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு**: நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம் ,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்**: நாவன்மையால் நல்ல பெயர்கள் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்

**கும்பம்**: பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்துககளால் நன்மையுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலையுண்டு.

**மீனம்**: மனதில் இனம்புரியாத சந் தோசம் குடிகொள்ளும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களால் மிகவும் துணிச்சலாக அவமதிக்கப்பட்டவன் நான் மட்டுமே

## அடுத்த ஜனாதிபதி கடுமையானவராக இருப்பார்–மைத்திரி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஆட்சியில் இருந்த ஆறு ஜனாதிபதிகளிலும், ஊடகங்களால் மிகவும் துணிச்சலாக அவமதிக்கப்பட்ட ஜனாதிபதி தானே என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடந்த ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தனக்குப் பின்னர் ஆட்சிக்கு வரும்ஜனாதிபதி, தன்னைப்போன்று, சேறு பூசல்களைப் பொறுத்துக் கொள்பவராக இருக்கமாட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த நான்கு ஆண்டுகளில் தன்னை நடத்தியதைப் போன்று. அடுத்த ஜனாதிபதியையும் நடத்தும் எண்ணம் கொண்டிருந்தால், கவனமாக இருக்க வேண்டும் என்றும் ஊடகங்களை அவர் எச்சரித்தார். "இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் என்னை இலக்கு வைத்து தாக்கின. அவர்களுக்கு நான் எளிதான இலக்காக இருந்தேன்.

டி.பி.விஜேதுங்கவைத் தவிர வேறெந்த ஜனாதிபதிக்கும், ஊடகங்களுடன் நல்லுறவு இருந்ததில்லை.

இப்போது அடுத்த ஜனாதிபதி பதவிக்குப் பலரது பெயர்கள் முன் மொழியப்படுகின்றன. இவர்களில் யார் ஜனாதிபதியாகப் பதவிக்கு வந்தாலும், ஊடகங்களுக்கு அது கடுமையாக இருக்கும்" என்றும் ஜனாதிபதி எச்சரித்தார்.

ஒரு நாடு என்ற வகையில் நாம் முன்னோக்கி பயணிப்பதற்கு ஊடக சுதந்திரத்தைப் போன்றே ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுதலும் முக்கியமாகும்.

அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கிடையே காணப்படும் பிரிவினை நாடு என்ற வகையில் முன்னோக்கிப் பயணிப்பதற்கு ஒருபோதும் பொருத்தமானதல்ல எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விமர்சனங்களைப் போன்றே சிறந்த சமூகமொன்றிற்கான கலந்துரையாடல்களும் கருத்தாய்வுகளும் முக்கியமானவையாகும்.

பல்வேறு அவதூறான கருத்துக்களை தனக்கு எதிராக தெரிவித்துவரும் நிலையிலும் ஊடக சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தைப் பெரிதும் மதிக்கின்ற, அவற்றை நாட்டிற்கு பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தலைவர் என்ற வகையில் தான் அமைதியாக இருந்தபோதிலும் மாற்றத்தினூடாக எதிர்பார்க்கும் கதாபாத்திரம் அவ்வாறு அமைதியாக இருக்காது என்பதை



கடந்த சில தசாப்தங்களாக நாட்டை ஆண்ட ஆட்சியாளர்களின் அனுபவங்களினூடாக புரிந்துகொள்வது சிரமமானதல்ல எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆகையினால் ஊடகங்களின் பொறுப்பாக அமைய வேண்டியது. விமர்சனங்கள், எதிர்ப்புக்கள், கலந்துரையாடல்கள் மற்றும் சிறந்த ஒழுக்கமான சமூகத்தை நோக்கிய பயணத்திற்கு பலமாக செயற்படுவதாகுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

பற்றுறுதி வழங்குதல் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தொடர்பில் இதன்போது கவனம் செலுத்திய ஜனாதிபதி, மீண்டும் அவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)


### பெயர் மாற்றம்

விடத்தற்பளை மிருசுவிலை வசிப்பிடமாகக் கொண்ட கந்தர்மாணிக்கவாசகர் ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் கந்தர் மாணிக்கர் என தவறுதலாகப் பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் என் சகல ஆவணங்களிலும் கந்தர் மாணிக்கவாசகர் என்ற பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
கந்தர் மாணிக்கவாசகர்
(8437)

பழைமை வாய்ந்த

### ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும்.
(பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

(C-6046)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


### திறந்த கேள்வி கோரல்

23.02.2019 ஆம் திகதியன்று எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட **NPRE 0998** மகேந்திரா உழவியந்திரத்தினை விற்பனை செய்வதற்கென தீர்மானிக்கப்பட்ட முகாமைக்குழுத் தீர்மானத்திற்கமைவாக குறித்த மகேந்திரா உழவியந்திரத்தினை 17.04.2019 அன்று மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல தலைமை அலுவலகம், ஜெயந்திநகர் என்னும் முகவரியில் காலை 10 மணிக்கு திறந்த கேள்வி மூலம் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப இதனைப் பெற விரும்புவோர் மற்றும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் நேரில் வந்து கேள்வியினை கோரிப் பெற்றுக் கொள்ள முடியும்.

**குறிப்பு:-** இதற்கான ஆரம்பக் கேள்வி ரூபா 700,000 (ஏழு லட்சம்) ஆகும். அதிகூடிய கேள்வி கோரி பெற்றுக்கொள்வோர் பணம் செலுத்திப் பற்றுச் சீட்டினைப் பெற்றதன் பின்னரே உழவியந்திரத்தினை இல்லத்திலிருந்து வெளிக்கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். (C-6065)

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்


### கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 4<br>கி.பா: 24 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L,சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு:படித்தபெண். உள்நாடு ஆண் பதிவுத்திருமணத்துடன் விவாகரத்தானவர்.<br>தொ.இ: B/9558 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 37 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: **B.Sc,** ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில்/வெளிநாடு<br>தொ.இ: G/3791 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி 3<br>கி.பா: 56செவ் 8 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L,வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரணதரஅரசதொழில் உள்நாடு<br>தொ.இ: B/9560 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 29 ¼ செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MBBS Doctor<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Lawyer. உள்நாடு<br>தொ.இ: G/3815 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்:மகம்<br>கி.பா: 55 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L,France<br>எதிர்பார்ப்பு:படித்தபெண்உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9568 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 28 ½ செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: G/3818 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ: B/9569 | பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 4<br>கி.பா: 24<br>தகைமை/தொழில்:MAபட்டதாரி ஆசிரியர்.<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் விரும்பதக்கது. விவாகரத்து ஏற்கப்படும். உள்நாடு<br>தொ.இ: G/3841 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய வருஷப்பிறப்பு (விகாரி வருஷம்) கருமங்கள்

**வாக்கிய பஞ்சாங்கம்**

சித்திரை மாதம் 01 ஆம் திகதி 14.04.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.12 மணிக்கு பூர்வபக்க தசமி திதியில் ஆயிலிய நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சூலம் நாம யோகத்தில் தைதிலக்கரணத்தில் கடக லக்கினத்தில் விருச்சிக நவாம்சத்தில், சூரியன் காலவோரையில், சூரியன் சூக்கும வோரையில், சாத்வீக குண வேளையில், நட்சத்திர பட்சியாகிய ஆந்தை துயில் தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய "விகாரி" வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் 9.12 மணி தொடக்கம் பிற்பகல் 5.12 மணி வரையுள்ள விஷு புண்ணிய காலமாகும்.

**திருக்கணி பஞ்சாங்கம்**

சித்திரை மாதம் 01 ஆம் நாள் (14.04.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.09 மணிக்கு "விகாரி" என்றும் பெயருடைய தமிழ்ப் புது வருடம் பிறக்கின்றது. அந்நேரம் நட்சத்திரம் ஆயிலியம் 2ம் பாதம். திதி பூர்வபக்க தசமி இவ் வருடம் 60 வருட சுற்று வட்டதில் 33 ஆவது வருஷமாகும். அன்று பகல் 10.09 மணி முதல் மாலை 6.09 மணி வரை மேட சங்கிரமன புண்ணிய காலமாகும். வருடம் பிறக்கும் போது உதய லக்கினம் "கடகம்" ஆகும்.

**பொதுவாக நாம் பின்பற்ற வேண்டியவை**

இப் புண்ணிய காலத்தில் யாவரும் வைகறையில் துயில் எழுந்து மனத்தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து, அறம், பொருள், இன்பங்களையும் சிந்தித்து கண்ணாடி தீபம், நிறைகுடம் தன் வலக்கை தாய், தந்தை ஆகியோரின் பாதம், தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய மலர், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் ஆலிலையும், காலில் இலவமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளை, சிவப்பு கரையமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து முத்து, மாணிக்கம் இழைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேஸ்வரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தானதர்மங்களை யாற்றி சூரியனுக்கு பொங்கல் பூசை வழிபாடு செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், உறவினருடன், நண்பர்களுடன், அளவளாவி, அறுசுவை உணவுடன் சுக்கு, திப்பிலி, மிளகு, அப்பம் சேர்த்தருந்தி கண்ணாடியில் முக தரிசனம் செய்து இப் புதிய வருஷ பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணந்து அரிய மானிடப் பிறவியில் செயற்பாலன வற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

**சங்கிரம தோச நட்சத்திரங்கள்**

புனர்பூசம், பூசம், ஆயிலியம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் 1ம் கால், ரேவதி இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ் செய்து இயன்ற தான தருமங்களை செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**மருத்துநீர் தயாரித்தல்**

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக் கொள்க.

**விகாரி வருஷ கைவிசேஷம்**

**வாக்கிய பஞ்சாங்கம்**

14.04.2019 ஞாயிறு முன்னிரவு 10.31-11.15 மணிவரை
17.04.2019 புதன் முற்பகல் 10.16-11.51 மணிவரை
18.04.2019 வியாழக்கிழமை முற்பகல் 9.47-11.46 மணிவரை

**திருக்கணித பஞ்சாங்கம்**

14.04.2019 ஞாயிறு நண்பகல் 11.00-12.00 மணிவரை
14.04.2019 ஞாயிறு முன்னிரவு 8.20-9.30 மணிவரை
15.04.2019 திங்கள் அதிகாலை 5.00-6.00 மணிவரை

# சாஞ்மலை தோட்டத்தில் அமைதியின்மை பொலிஸ் பாதுகாப்புடன் சம்பளம் வழங்கல்



(நோர்வூட்)

பொலிஸாரின் பலத்த பாதுகாப்போடு சாஞ்மலை தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா சாஞ்மலை தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்த சம்பளம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் வழங்கி வைக்கப்பட்டதோடு சாஞ்மலை தோட்டப்பகுதியில் அமைதியின்மையும் ஏற்பட்டது.

டிக்கோயா சாஞ்மலை தோட்டப்பகுதியில் மக்கள் பாவனைக்கு பயன்படுத்தும் நீரினை தனியார் தொழிற்சாலைக்கு கொண்டு செல்ல முயற்சித்த சம்பவம் தொடர்பில் குறித்த தோட்ட உதவி முகாமையாளர் சாஞ்லை தோட்ட பெண் தொழிலாளர் களை கடந்த இரண்டு வாரத்திற்கு முன்பு தகாத வார்த்தையில் பேசியது தொடர்பில் குறித்த உதவி முகாமையாளரை தோட்டத்தை விட்டு வெளியேற்றுமாறு மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை சாஞ்மலை தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதாந்த வேதனத்தை தோட்ட உதவி முகாமையாளர் வழங்க முன்வந்தமையால் குறித்த உதவி முகாமையாளரிடம் இருந்து சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள மட்டோம் எனக் கூறி மாலை 4 மணியளவிலிருந்து இரவு 8 மணி வரை தோட்ட காரியாலயத்திற்கு முன்பு சாஞ்மலை தோட்டமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு நோர்வூட் மற்றும் ஹற்றன் ஆகிய பொலிஸார் வரவழைக்கப்பட்ட போது மக்களுக்கு இடையில் அமைதியின்மையும் ஏற்பட்டது.

இதேவேளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மாட்டு சாணத்தினை கரைத்து தோட்ட உதவி முகாமையாளருக்கு ஊற்றுவதற்கும் தயார் நிலையில் இருந்த வேளை பொலிஸாரின் முயற்சியால் அது முறியடிக்கப்பட்டது.

நோர்வூட் பொலிஸார் மற்றும் நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் ரவி குழந்தைவேல் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து சாஞ்மலை தோட்ட முகாமையாளர் குறித்த மக்களுக்கு சம்பளத்தை வழங்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் இரவு 8.30 மணியளவில் தமது சம்பளத்தை பெற்றுக்கொண்டு ஆர்ப்பாட்டத்தினை கைவிட்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நிச்சயமாக வெற்றிபெறும் தூய்மையான வேட்பாளரை ஐ.தே.முன்னணி களமிறக்கும்

## அமைச்சர் மனோ கூறுகிறார்



(கொழும்பு)

எமது தரப்புக்கு சவால் விடும் ஒருவரை எதிரணி நியமிக்க வேண்டும் என்றால் கோத்தபாய ராஜபக்ஷ வருவதே நல்லதாகும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கோத்தபாய ராஜபக்ஷ குறித்து இன்று அதிகமாக பேசப்படுகின்றது. அவர் ஒரு அமெரிக்க பிரஜாவுரிமை கொண்ட நபர். இரண்டு நாடுகளின் பிரஜாவுரிமை கொண்ட நபர் ஒருவர் அமெரிக்க பிரஜாவுரிமைக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பார்.

அவர் அமெரிக்கப் பிரஜாவுரிமையை கைவிட்டு வந்தால் இங்கு போட்டியிட முடியும். ஆனால் அமெரிக்க குடியுரிமையை பெற்றுக்கொள்வது சாதாரண விடயம் அல்ல.

அதேபோல் அமெரிக்கப் பிரஜாவுரிமையை கைவிடுவதும் கடினமான விடயமாகும்.

அதேபோல் 19 ஆம் திருத்தம் வந்துவிட்டது. இப்போது இரட்டைப் பிரஜாவுரிமை நபர் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற நிலைமை உள்ளது. கோத்தபாய தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. எமது தரப்புக்கு சவால் விடும் ஒருவரை எதிரணி நியமிக்க வேண்டும் என்றால் கோத்தாபய ராஜபக்ஷ வருவதே நல்லதாகும். எமக்கும் போட்டியிட்டு வெற்றிபெற வேண்டும். அந்த வெற்றியில் தான் ஒரு பெறுமதி இருக்கும்.

அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் எமது வேட்பாளரை நாம் தெரிவுசெய்து விட்டோம். ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் சிறிய மற்றும் சிறுபான்மை கட்சிகள் அனைவரும் இந்த வேட்பாளருக்கு ஆதரவையும் தெரிவித்துவிட்டோம்.

ஐக்கிய தேசிய கட்சியின் பலமான ஒருவரே அவர். அவர் பொது அணியின் சார்பில் களமிறங்கவுள்ளார். நிச்சயமாக வெற்றிபெறும் தூய்மையான வேட்பாளரே அவர். வெகு விரைவில் அவரை அறிமுகப்படுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# நாடு கடத்தப்பட்ட மொஹமட் பைசால் விளக்கமறியலில்

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவன் மாகந்துரே மதூஷ் உடன் டுபாயில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட மொஹமட் நசீம் மொஹமட் பைசால் என்பவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு மேலதிக நீதவான் தனூஜா ஜயதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்திற்கு உதவி வழங்கியமை தொடர்பில் குறித்த நபருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த நபர் பாதாள உலக உறுப்பினரான கஞ்சிபான இம்ரானின் நெருங்கிய நபர் என வும் [illegible] (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணத் தேர்தலை நடத்தினால் ரணில் அரசு தோற்கும்-மைத்திரி



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் ரணில் தலைமையிலான இந்த அரசாங்கத்தை மக்கள் தோற்கடிப்பார்கள் என்று மத்திய மாகாண ஆளுநர் மைத்திரி குணரத்ன தெரிவித்தார்.

இதன் காரணமாக மேலும் ஒரு வருடத்துக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த மாட்டார்கள் என்று அவர் தெரிவித்தார்.

ஹற்றன், நோர்வூட் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுள்ளன. இன்று எந்தவொரு மாகாண சபைகளும் இல்லை. இன்று மாகாண சபைகளின் அதிகாரம் இருப்பது ஆளுநர்களின் கையிலே என்று மைத்திரி குணரத்ன தெரிவித்தார். (இ-7)

# எண்ணெய் தொழிற்சாலையில் வெடிப்பு

(அத்துருகிரிய)

அத்துருகிரிய பகுதியில் எண்ணெய் தொழிற்சாலை ஒன்றில் தாங்கி வெடித்ததில் பாரிய தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

அத்துருகிரிய, ஒருவல பிரதேசத்தில் அமைந்துள்ள இரும்பு உருக்கு நிறுவனம் ஒன்றில் அனல் எண்ணெய் களஞ்சியசாலையிலுள்ள தாங்கி ஒன்றே இவ்வாறு வெடித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 6



மணியளவில் இடம்பெற்ற இந்த வெடிப்பு காரணமாக ஊழியர் ஒருவர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெடிப்புச் சம்பவத்தால் ஏற்பட்ட தீப்பரவலை தீயணைப்புப் படையினர் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

வெடிப்புச் சம்பவத்தால் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## "போதையில் மோதி பாதையை மாற்றாதே"

# "மனிதா விழி மதுவை ஒழி" மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



(போரதீவு)

போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போதையற்ற உலகம் என்ற தொனிப்பொருளின்கீழ் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை போரதீவுப்பற்றுப் பிரதேச சபையில் கடமை புரியும் அரச உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நாட்டிற்காக ஒன்றிணைவோம் என்ற தேசிய திட்டத்திற்கு அமைவாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'போதையில் மோதி பாதையை மாற்றாதே', 'புகையிலையை நிறுத்தி புதுயுகம் படைப்போம்', 'புகை மனிதனுக்குப் பகை', 'கிழக்கில் போதைக்கான ஒரு நாள் செலவு நாற்பது இலட்சம் ரூபாய்', 'மனிதா விழி மதுவை ஒழி', 'மதுவின் வாசம் மரணத்தின் சத்தம்' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

# மரத்திலிருந்து தேங்காய் விழுந்தாலும் குறைசொல்லும் அரசியல்வாதிகள்

## அமைச்சர் ரவி விமர்சனம்

(மஸ்கெலியா)

மரத்திலிருந்து தேங்காய் கீழே விழுந்தாலும் விமர்சனம் செய்யும் அரசியல் வாதிகள் இந்த நாட்டில் இருக்கிறார்கள் என மின்சக்தி, எரிசக்தி, சக்தி வலு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியா மவுசாகலை சமன் ஆலயத்திற்கு நேற்று முன்தினம் சென்ற அமைச்சர் விசேட வழிபாடுகளில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள



வரட்சியின் காரணமாக மின் சாரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இருந்தாலும் மக்களுக்கு சீரான மின்சாரத்தை நாங்கள் வழங்கி வருவதோடு, எக்காரணத்தைக் கொண்டும் மின்சாரம் தடைசெய்யப்படாது என வும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நோயாளிகளிடம் இனவாதம் வேண்டாம் மட்டக்களப்பில் மக்கள் ஆர்ப்பாட்டம்



(மாவடிவேம்பு)

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று வியாழக்கிழமை காலை மாவடிவேம்பு பிரதேச மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலை முன்றலில் ஒன்றுகூடிய பொதுமக்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவடிவேம்பு பிரதேச வைத்தியசாலைக்கு வழங்கப்படவிருந்த அம்புலன்ஸை திருகோணமலை புல்மோட்டை பிரதேச வைத்திய சாலைக்கு மாற்றம் செய்ததைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'சுகாதார இராஜாங்க அமைச்சரே நோயாளிகளில் இனவாதம் காட்டாதே', 'அவசர சிகிச்சைப் பிரிவு நோயாளிகளை கொல்லாதே' போன்ற பல வாசகங்களை ஆர்பாட்டக்காரர்கள் கைகளில் ஏந்தியிருந்தனர். (இ-7)

# சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு மதுபான நிலையங்கள் மூடல்!

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மதுபான நிலையங்களை மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நாடுபூராகவும் மதுபான நிலையங்களை மூடுவதற்கு மதுவரித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய இம் மாதம் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படவுள்ளன.

இதேவேளை சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்து மதுபான சாலைகளும் 13 ஆம் மற்றும் 14 ஆம் திகதிகளில் மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வருடாந்த மஹோற்சவம்

தென்மராட்சி நுணாவில் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் நாளை மறுதினம் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (5-29)

## மதூஷுடன் தொடர்பு

# நடிகர் ரயனுக்கு மீண்டும் மறியல்

(மாத்தறை)

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் மாகந்துரே மதூஷுடன் டுபாயில் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்ட நடிகர் ரயன் வென் ரோயனுக்கு மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நடிகர் ரயன் வென் ரோயன் நேற்று ஆஜர் படுத்தப்பட்டபோதே, அவரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நடிகர் ரயன் வென் ரோயன் உள்ளிட்ட 5பேர் டுபாயிலிருந்து, இலங்கைக்கு கடந்த 04ஆம் திகதி நாடு கடத்தப்பட்டதைத் தொடர்ந்து, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களை குற்றப் புல னாய்வுப் பிரிவினரும் பண்டாரநாயக்க விமான நிலையத்திலுள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரும் 18 மணித்தியாலம் விசாரணை செய்திருந்தனர்.

இதேவேளை, நடிகர் ரயன் வென் ரோயன் தவிர்ந்த, ஏனைய நால்வரும் விசாரணையை அடுத்து விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதன் பின்னர், நடிகர் ரயன் வென் ரோயன் கஞ்சா வைத்திருந்தமை உள்ளிட்ட விசாரணைக்காக வெலிகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த 5ஆம் திகதி மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் நடிகர் ரயன் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதவான் இசுர நெத்திகுமார வினால் நேற்று வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

அவரை மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, மீண்டும் விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

கடந்த பெப்ரவரி 9ஆம் திகதி ரயனின் காரிலிருந்து 5.75 கிராம் கேரளக் கஞ்சா பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு பொதுவைத்தியசாலையின் சேவைகளை சீர்செய்யுமாறு வேண்டுகோள் விடுத்து போராட்டம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்படும் சேவைகளைச் சீர் செய்ய மக்கள் சுகாதார அமைச்சு உள்ளிட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இது தொடர்பில் நேற்று முல்லை. மாவட்ட வைத்திய சாலைக்கு முன்பாக மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தி மகஜர் கையளித்துள்ளார்கள். அந்த மகஜரில் முல்லைத்தீவு மாவட்ட மக்களாகிய நாங்கள் எங்கள் வைத்திய சாலையின் மேம்பாடு கருதி தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

போரினாலும் சுனாமி அனர்த்தத்தினாலும் மோசமாக பாதிக்கப்பட்ட நாங்கள் எமது வைத்திய சேவைகளுக்காக இந்த மாவட்ட வைத்தியசாலையையே நம்பி இருக்கின்றோம்.

போர் முடிந்து பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்த வைத்தியசாலையில் இருந்து திருப்திகரமான வைத்திய சேவையை பெறமுடியவில்லை என்பது துரதிஷ்டவசமான ஒன்று. போதிய வைத்தியர்கள் இல்லை, ஏனைய ஆளணிகள் போதியளவு இல்லை, வைத்தியர்கள் உள்ளிட்ட ஆளணியினரின் சீரான சேவையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள அசமந்தப் போக்கு, நோயாளர் நலன் தொடர்பில் கரிசனை இல்லாமை, பௌதீக வளப்பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் மக்களாகிய எங்களது சிகிச்சை பெறுவதற்கான அடிப்படை உரிமை மறுக்கப்படுகின்றது.

வைத்தியசாலையில் உரிய ஆளணியினை பூர்த்தி செய்தல், வைத்தியசாலைக்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்குதல், வைத்தியர்களுக்கும் தங்கள் கடமை நேரத்தில் வைத்தியாசலையில் இருப்பதையும் சிறந்த கடமையாற்றுவதையும் உறுதிப்படுத்துதல், செவ்வனே கடமைபுரியும் வைத்தியர்களுக்கும் ஏனைய வைத்தியர்களாலும் பணியாளர்களாலும் இடையூறு ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்துதல், வைத்தியசாலையின் செயற்பாட்டறைகள் உரிய இடத்தில் இருத்தலை உறுதிப்படுத்தல் (உதாரணமாக அவசரசிகிச்சைப் பிரிவு பொருத்தமற்ற இடத்தில் இருத்தல்).

செயற்படாது இருக்கும் தீவிர சிகிச்சைப்பிரிவை உடன் செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல், நோயாளர்களுக்கான சிகிச்சையின் போது அதற்கான வைத்திய நிபுணர்கள் உட்பட அனைத்து ஆளணியினரும் நேரடியாக பங்கெடுப்பதை உறுதிப்படுத்தல், நோயாளர் சிகிச்சையினை தொலைபேசி ஊடாகவோ அல்லது வேறு சாதனங்கள் ஊடாகவோ வழிநடத்தலை தவிர்த்தல், வைத்தியர்கள் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கான வழிவ

## மகஜர் கையளிப்பு

ஏனைய ஆளணியினருக்கும் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நோயாளர்கள் உரிய சிகிச்சை பெறுவதை உறுதிப்படுத்தல், நோயாளர்கள் தகுந்த காரணம் இன்றி வேறு வைத்தியசாலைகளுக்கு மாற்றுவதை நிறுத்தல், வைத்தியர்கள்







கைகளை தவிர்த்தல், மாவட்ட பொது வைத்தியசாலையின் விதிமுறைகளுக்கு அமைய வெளி நோயாளர் பிரிவில் எந்நேரமும் வைத்தியர் ஒருவராவது கடமையில் இருத்தலை உறுதிப்படுத்தல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை சுகாதார அமைச்சர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலா ளர், வடமாகாண 'சுகாதார சேவைகள் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (7-281)




# நீண்டகாலத்தின் பின்னர் இடம்பெற்ற கிளி.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நீண்ட காலத்தின் பின் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 24 ஆம் திகதி இறுதியாக கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்றது. அதன் பின்னர் நேற்று இடம்பெற்றுள்ளது.

இக்கூட்டத்தில் விவசாயம், நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி, காணி போன்ற பல விடயங்கள் ஆராயப்பட்டன. பல தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செஞ்சோலை காணியினை தற்போது அங்கு குடியேறியுள்ள செஞ்சோலை பிள்ளைகளுக்கே பகிர்ந்தளிக்க வேண்டும் போன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

மேலும் மாவட்டத்தில் ஒவ்வொரு துறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்திகள், தேவைகள், பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (7-312)

# சுகாதார அமைச்சால் அம்புலன்ஸ் வழங்கல்

(பரந்தன்)

இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளுக்கென சுகாதார அமைச்சினால் மேலும் ஒரு தொகுதி அதிநவீன நோயாளர் காவுவண்டிகள் நேற்று முற்பகல் 10 மணியளவில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் ஆகியோரது முயற்சியால் வருவிக்கப்பட்ட இந்த நோயாளர் காவுவண்டிகளை அவர்கள் இருவரும் இணைந்து வழங்கி வைத்தனர்.

இவற்றில் கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்டகாலமாக நோயாளர் காவுவண்டிகள் இன்றிச் சிரமப்பட்டு வந்த வேரவில் மற்றும் வட்டக்கச்சி பிரதேச வைத்தியசாலைக்கும் புதிய நோயாளர் காவுவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (7-312)

# சட்டவிரோத மணல் அகழ்விற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் ஆகிய பகுதிகளில் வீதிகளை குடைந்து சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் இதனைக்கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள ஸ்கந்தபுரம் பகுதியில் குடியிருப்பு வீதிகளில் தொடர்ந்தும் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன் அக்கராயன்குளத்திற்கான நீரைச் சேர்க்கும் ஆற்றினையும் அதனை அண்மித்த பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறிப்பாக பகல் வேளைகளில் உழவு இயந்திரங்களில் ஏற்றப்படும் மணல் கொங்காதரன் குடியிருப்பு கரித்தாஸ் குடியிருப்பு போன்ற பகுதிகளில் ஆட்களற்ற காணிகளுக்குள் மணல் குவிக்கப்பட்டு இரவு வேளைகளில் டிப்பர் வாகனங்களில் ஏற்றி வெளியிடங்களுக்குக்கொண்டு செல்லப்படுகின்றது. இவ்வாறு மேற் கொள்ளப்பட்டு வரும் மணல் அகழ்வுகளால் பிரதேச வீதிகள் மற்றும் பிரதான வீதிகள் மிக மோசமாக சேதமடைகின்றன. இவ்வாறு இடம்பெறுகின்ற மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்துமாறு பலராலும் கோரிக்கை விடப்பட்டு வருகின்றது. ஆனால், இதுவரை இதனைக்கட்டுப்படுத்த எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என கிராமமட்ட அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பிரதேச மக்கள் இவ்வாறான சட்டவிரோதமான மணல் அகழ்வுகளைத்தடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க [illegible] பல்வேறு தரப்பி[illegible] கோரிக்கை விடுத்துள்ளனர். (7-315)

# தமிழ்த்தேசிய மே நாள் இவ்வாண்டு கிளிநொச்சியில்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் (இலங்கை தமிழ் அரசுக் கட்சி) இவ்வாண்டுக்கான தமிழ்த் தேசிய மே நாள் (உலகத் தொழிலாளர் தினம்) வடக்கு மாகாணம் தழுவிய வகையில் ஒன்றுபடுவோம் போராடுவோம் உரிமைகளை வென்றெடுப்போம் என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலிலிருந்து எழுச்சிப் பேரணியாக புறப்பட்டு டிப்போச் சந்தியில் அமைந்துள்ள பசுமைப் (பாண்டியன்) பூங்காவைச் சென்றடைவதைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய எழுச்சியுடன் கூடிய மாபெரும் பொது கூட்டமும் நடைபெறவுள்ளது.

தமது கைகளாலேயே தங்கள் கணவரை, மகனை, மகளை இராணுவத்திடம் ஒப்படைத்து விட்டு பத்து ஆண்டுகள் கடந்தும் காணாமலாக்கப்பட்ட, அவர்களைத் தேடித்தேடியே தம் தேகம் கரைக்கும் எங்கள் உறவுகளுக்கு நீதி வேண்டியும் சிறையின் இரும்புக்கரங்களுக்குள் அகப்பட்டு தமது வாழ்வின் விடியல் நோக்கிய வெளிச்சத்திற்காக ஏங்கிக் கொண்டிருக்கும் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்காகவும் தமது நிலங்களைப் பறிகொடுத்து தொழிலுக்கும் வாழ்வுக்கும் அல்லாடும் எமது தொழிலாளர்களின் உரிமைக்காகவும் ஒன்றுபட்டு குரல் கொடுக்கும் எழுச்சி நாளாகவே இவ்வாண்டுக்கான தமிழ்த்தேசிய மே நாள் அமைகிறது என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அறிவித்துள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்க நெறியில் மேம்பட்டவர்கள் நாம் சீர்கேடுகளுக்குள் சிக்கித் தவிக்கலாமா?

## சிறீதரன் எம்.பி. ஆதங்கத்துடன் கேள்வி





(கிளிநொச்சி)

எமது கலாசாரத்தாலும் பண்பாட்டாலும் மேம்பட்ட நாம் ஒழுக்க நெறியில் சிறந்தவர்களாகத் திகழ்ந்து உலகுக்கே எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்கள் நாம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பாரதிபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் அன்னதான மண்டபத் திறப்பு விழா நேற்று முன்தினம் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அன்னதான மண்டபத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் எமது இன விடுதலைக்காகப் போராடுகின்ற




இனமாகக் காணப்படுகின்ற போதிலும் எமக்கென்றொரு தனித்துவமான பண்பாட்டோடும் கலாசாரத்தோடும் உலகத்தவர்கள் விரும்பும் வகையில் நல்ல நெறிமுறைப்படி வாழ்பவர்கள் தான் நாம். எமக்குரிய தனி மனித ஒழுக்கத்தைக் கட்டிக் காத்து எமது இனத்தின் பெருமையை உலகுக்கே முன்னுதாரணமானவர்கள்தான் நாம். அறவழியில் வாழ்ந்து உலகுக்கே நல்லறங்களைப் போதித்தவர்கள் நாம். எமது இனத்தின் பெருமையை வரலாற்று ஆவணங்கள் இன்றும் பறைசாற்றி நிற்கின்றன.

ஆனால் தற்காலத்தில் எமது இளைய தலைமுறையிடத்தில் ஒழுக்க நெறி பிறழ்வான எமது தனித்துவத்தை சிதைத்தழிப்பதற்கான செயற்பாடுகள் வேண்டுமென்றே விதைக்கப்பட்டு வருவதை நோக்க முடிகின்றது.

சஞ்சா போன்ற போதைப் பொருள்கள் பிற தேசங்களிலிருந்து எமது பிரதேசங்களுக்குக் கொண்டுவரப்பட்டு எமது இளைய தலைமுறையினரை இலக்கு வைத்து விற்கப்படுகின்றது. இது எமது இனத்தின் தனித்துவத்தை அழிப்பதற்காக எங்கேயோ திட்டமிடப்பட்ட செயற்பாடு என்பது புலனாகின்றது.

எமது இளைய தலைமுறையினர் எமது வரலாற்றை மறந்து நாம் யார் என்பதை மறந்து செயற்படுவது எமது இனத்தை மிகமோசமான ஆரோக்கியமற்ற ஒரு நிலைக்குக் கொண்டு செல்லும்.

எனவே எமது இன்றைய இளையவர்கள் தான் எமது இனத்தின் தனித்துவத்தைக் கட்டிக் காத்து எமது இன அடையாளங்களைப் பேணி தனிமனித ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றி எமது இனத்திற்கு நல் வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும். ஆதற்கு இப்படியான ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், அறத்தில் மேம்பட்ட பெரியார்கள் அவர்களுக்கு சிறந்த ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கி அவர்களை நல்வழிப்படுத்துவதுடன் எமது தனித்துவங்களையும் பேணி எமது இலக்கு நோக்கிய எமது விடுதலையை அடைவதற்கு பலம் சேர்க்க முடியும் என மேலும் தெரிவித்தார். (7)

# தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தில் அரசியல்

## மன்னார் நகர முதல்வர் சுட்டிக்காட்டு




(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள வீட்டுத் திட்டத்தின் பின்னணியில் அரசியல் காணப்படுவதாகவும் வீட்டுத் திட்டத்தை வழங்குவதில் அரச உயரதிகாரிகள் சிலர் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே செயற்படுவதாகவும் இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாக மன்னார் நகர சபையின் முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல்வேறு கிராமங்களில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீட்டுத்திட்டங்கள் அமுல்படுத்தப் பட்டுள்ளன.

ஆனால் உண்மையாக பாதிக்கப்பட்ட, தேவையுடையவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. அவர்கள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த வீட்டுத்திட்டத்தை தீர்மானிப்பது மன்னார் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையா அல்லது ஆளும் கட்சி அரசியல்வாதிகளா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

சம்பந்தமே இல்லாத அரசியல்வாதிகள் மக்களை ஒரு இடத்திற்கு கூட்டிச் சென்று பிரதேச செயலாளரை அழைத்து வீட்டுத் திட்டம் வழங்குகின்ற நிலையே தற்போது காணப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற் கொண்டு உரிய முறையில் குறித்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக நான் பல தடவைகள் அவ் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றும் இதுவரை உரிய தீர்வு வழங்கப்படவில்லை. குறித்த செயற்பாடுகளை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இதன் பின்புலத்தில் அரசியல்வாதிகளும் இருக்கின்றார்களா? என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

உண்மையில் பாதிக்கப்பட்ட எத்தனையோ குடும்பங்கள் வீடுகள் இன்றி தவிக்கின்ற நிலையில், பக்கச்சார்புடன் குறித்த வீட்டுத்திட்டம் வழங்கப்படுகின்றது.

எதிர்காலத்தில் இவ்விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் வீட்டுத் திட்டம் வழங்கப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (7-285)

# புலமைப்பரிசிலில் சித்தியடைந்த இரு மாணவிகளுக்கு இராணுவத்தால் வீடுகள் நிர்மாணித்து கையளிப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளை பெற்ற வறுமைக் கோட்டிற்குட்பட்ட இரண்டு மாணவிகளுக்கு இராணுவத்தால் வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன.

வன்னி பாதுகாப்பு படைகளின் கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேராவின் ஆலோசனை வழிகாட்டலில், ஐக்கிய நாடுகள் அமையத்தில் பணியாற்றும் குருநாகலை சேர்ந்த சந்தன அழககோன் மற்றும் ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஆகியோரின் நிதி உதவியுடன் இரண்டு வீடுகள் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் குறித்த பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 2018 ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற வவுனியா சிவபுரம் வித்தியாலயத்தை சேர்ந்த மாணவி ஹரிநிக் ஹன்சுஜா மற்றும் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தை சேர்ந்த ஆர்.நிவர்சனா ஆகியோர் நிரந்தர வீடு இல்லாமல் கல்வியை முன்னெடுக்க மிகவும் சிரமப்பட்டார்கள். இதனால் அப்பிள்ளைகளின் தேவை குறித்து அறிந்து கொண்ட இராணுவத்தினர் அவர்களுக்கு நிரந்தர வீடு அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதன்படி வீடு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், வீட்டிற்கு தேவையான நாற்காலிகள், மேசைகள், சமையல் உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளதுடன், வீட்டுத் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (7-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஆந்திராவில் தேர்தல் மோதல்; தொண்டர் ஒருவர் வெட்டிக் கொலை

(அமராவதி)

ஆந்திராவில் வாக்குப் பதிவு நடைபெற்று வரும் நிலையில், வாக்குச்சாவடி அருகே நடந்த மோதலில் தெலுங்கு தேசம் கட்சி தொண்டர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்



மக்களவை தேர்தலுக்கான முதல் கட்ட வாக்குப்பதிவு நேற்று ஆரம்பமானது. முதல் கட்டமாக 20 மாநிலங்களில் 91 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது. ஆந்திராவில் உள்ள 25 மக்களவைத் தொகுதிகள் மற்றும் 175 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது.

வாக்காளர்கள் காலை முதலே ஆர்வத்துடன் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்குகளை பதிவு செய்தவண்ணம் உள்ளனர். ஒருசில வாக்குச்சாவடிகளில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுதடைந்தன. இதனால் சிறிது நேரம் வாக்குப்பதிவு நிறுத்தப்பட்டது. வேறு வாக்குப்பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டு வாக்குப்பதிவு தொடங்கியது.

இந்நிலையில், ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள தாடிபத்ரி தொகுதிக்குட்பட்ட மீராபுரம் வாக்குச்சாவடி அருகே, ஆளும் தெலுங்குதேசம் கட்சியினரும், வைஎஸ்ஆர் காங்கிரஸாரும் கடுமையாக மோதிக் கொண்டனர். இந்த மோதலில், தெலுங்குதேசம் கட்சியைச் சேர்ந்த சித்தா பாஸ்கர் ரெட்டி என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இதேபோல் ஆந்திராவின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் தொடர்பாக ஆளும் தெலுங்கு தேசம் கட்சியினருக்கும், வைஎஸ் ஆர் காங்கிரஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இரு தரப்பிலும் சிலர் காயமடைந்துள்ளனர். சட்டனபள்ளி தொகுதியில் சட்ட சபை சபாநாயகர் கொடிலா சிவப் பிரசாத ராவ் தாக்கப்பட்டார். (7)

## கருக்கலைப்பு தடைச்சட்டம் அரசியலமைப்புக்கு முரணானது

### தென்கொரிய நீதிமன்றம் தீர்ப்பு

(சியோல்)

தென்கொரியாவில் கடந்த 66 வருடகாலமாக நடைமுறையிலிருந்த கருக்கலைப்பு தடைச் சட்டம் அரசியலமைப்பிற்கு முரணானதென அந்நாட்டு அரசியலமைப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2020ஆம் ஆண்டின் இறுதிக்குள் இந்த சட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கடந்த 1953ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் காணப்படும் சட்டத்தின் பிரகாரம், தடையை மீறி கருக்கலைப்பு செய்துகொள்ளும் பெண்களுக்கு ஓராண்டு சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம். கருக்கலைப்புச் சிகிச்சையைச் செய்யும் மருத்துவர்களுக்கு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் தாயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கருக்கலைப்பு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கருக்கலைப்பைத் தடை செய்யும் சட்டம் பெண்களுக்கு ஆபத்தை விளைவிக்குமென சமூக செயற்பாட்டாளர்கள் குறிப்பிட்டு வந்தனர். இந்த நடைமுறையை ரத்து செய்ய வேண்டுமென நீண்ட காலமாக சர்ச்சை நீடித்தது.

இந்நிலையில், அந்நாட்டின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக அந்த சட்டத்தை மாற்றியெழுத நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (7)

## நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் துப்பாக்கிச் சட்ட மசோதா நிறைவேற்றம்

(வெலிங்டன்)

நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் துப்பாக்கிச் சட்ட சீர்திருத்த மசோதா நிறைவேறியது.

நியூசிலாந்தின் கிறைஸ்ட்சர்ச் நகரில் உள்ள 2 மசூதிகளில் கடந்த மாதம் பயங்கரவாதி நடத்திய துப்பாக்கிசூட்டில் இந்தியர்கள் 7 பேர் உட்பட 50 பேர் கொல்லப்பட்டனர்.

உலகையே கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த தாக்குதலுக்கு பின் நியூசிலாந்தில் துப்பாக்கி பயன்பாடு மற்றும் விற்பனையில் கடும் கட்டுப்பாடுகள் கொண்டுவர வேண்டும் என்கிற கோரிக்கை வலுத்தது.

அதன்படி துப்பாக்கிச் சட்டத்தில் சீர்திருத்தம் கொண்டுவரப்படும் என பிரதமர் ஜெசிந்தா உறுதி அளித்தார். இதற்கிடையில் அங்கு பாதியளவு தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் தாக்குதல் ரக துப்பாக்கிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் துப்பாக்கி சட்ட சீர்திருத்த மசோதா அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேறியது. (7)

## நியூசிலாந்து தீவிரவாதத் தாக்குதலின் எதிரொலி பல்லாயிரக்கணக்கான துப்பாக்கிகள் கையளிக்கப்படும்

### பொலிஸார் நம்பிக்கை



(வெலிங்டன்)

நியூசிலாந்தில் துப்பாக்கிகளுக்கான புதிய சட்டத்திற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியதை அடுத்து பல்லாயிரக்கணக்கான துப்பாக்கிகள் கையளிக்கப்படும் என எதிர்பார்ப்பதாக நியூசிலாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நியூசிலாந்தில் துப்பாக்கிகள் வைத்திருப்பதற்கான புதிய சட்டம் குறித்து நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அனைத்து வகையான அரை தானியங்கித் துப்பாக்கிகளையும் தடை செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டது.

இந்நிலையில் குறித்த தடை சட்டம் சில நாட்களில் அமுலுக்கு வரவிருக்கும் நிலையில் பொலிஸார் இதனை அறிவித்துள்ளனர்.

நியூசிலாந்தில் கிறிஸ்சேர்ச் நகரில் உள்ள அல்நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதி ஆகியவற்றில் கடந்த மாதம் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது அங்கு சென்ற மர்ம நபர் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டதில் 50 பேர் உயிரிழந்தனர்.

உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய இந்த சம்பவத்தின் முக்கிய குற்றவாளியான பிரெண்டன் டரன்ட் கைதுசெய்யப்பட்டு அவரிடம் விசாரணையும் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி பொலிஸ் ஆணையர் மைக்கேல் கிளெமெண்ட், நியூசிலாந்தில் துப்பாக்கிகளை பதிவு செய்வதற்கு மக்களுக்கு எந்த சட்டமும் இல்லை. ஆகையால் எத்தனை துப்பாக்கிகளை மீண்டும் கையளிப்பார்கள் என்பதில் தாங்கள் உறுதியாக இல்லை என்றும் கூறினார். (7)

## ஜனாதிபதி

## இராணுவ

## பதற்ற நி



(கார்ட்டூம்)


சூடான் ஜனாதிபதி ஒமர் அல் பஷீர் பதவி விலகியுள்ளதாக அந்நாட்டு அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஓமர் அல் பஷீர் நேற்று வியாழக்கிழமை பதவி விலகியுள்ள நிலை யில் நாட்டை வழிநடத்துவதற்கான இடைக்கால சபையை அமைக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பஷீர் பதவி விலகிய

## வியாபார

## 3 பேர் ப



## கண்ணிலிரு

## வைத்தியர்க

(தைபே)

தாய்வான் பெண்ணின் கண்ணில் இருந்த 4 தேனீக்களை வைத்தியர்கள் நூதனமாக எடுத்து, அந்தப் பெண்ணின் கண்ணுக்கு எந்தப் பாதிப்பும் இன்றி காப்பாற்றியுள்ளனர்.

தாய்வானில் ஹீ என்ற 29 வயதான பெண் கடந்த வாரம் தனது உறவினரின் கல்லறைக்கு சுத்தம் செய்வதற்காக சென்றுள்ளார். பணி முடித்துவிட்டு வீட்டிற்கு செல்லும் போது கண்களில் அரிப்பு மற்றும் கடுமையான வலி ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...பதி பஷீர் பதவி விலகல்

## ...ுவம் குவிக்கப்பட்டு ...நிலையில் சூடான்




தன்பின் அதிகாரத்தை கைப்பற்ற இராணுவச் சபை முயற்சி செய்து வருவதாகவும், உற்பத்தி மற்றும் பொருளாதார வளங்கள் அமைச்சர், அடெல் மஹ்ஜூப் ஹூசைன் டுபாயை தளமாக கொண்டு இயங்கும் ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் சூடான் ஜனாதிபதி மாளிகையை சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அத்தோடு அடுத்த நகர்வு குறித்து இராணுவம் விரைவில் ஒரு அறிவிப்பை வெளியிடும் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை கார்ட்டூமில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் சூடானில் பரபரப்பான நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (7)

## ...ார சதுக்கத்தில் தீ ...பலி; 7 பேர் காயம்



(ரங்கூன்)

தாய்லாந்தின் பாங்கொக்கில் வியாபார சதுக்கத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 3 பேர் உடல்கருகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாங்கொக்கின் மையப்பகுதியில் அமைந்துள்ள, **Bangkok's Central World shopping mall** இல் நேற்று முன் தினம் புதன்கிழமை திடீரென தீ ஏற்பட்டது.

இந்த தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்ததோடு மேலும் 7 பேர் படுகாயமடைந்தனர். காயம் அடைந்தவர்களை மீட்ட தீயணைப்புத் துறையினர் அவர்களை அருகிலுள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்த்தனர். (7)

## ...ிருந்து 4 தேனீக்களை ...ர்கள் அகற்றி சாதனை

இதையடுத்து கைகளை கொண்டு வழக்கம்போல கண்களை கசக்கியுள்ளார். தொடர்ந்து வலி ஏற்படவே கண்களை கழுவியுள்ளார். சரிவரவில்லை. மறுநாள் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு சென்று வைத்தியரை அணுகியுள்ளார். அப்போது தான் அவருக்கு அதிர்ச்சியான செய்தி காத்திருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பாக வைத்தியர்கள் கூறுகையில்,

கண்களில் ஏதோ பூச்சியின் கால்கள் இருப்பது போல் இருந்தது. மைக்ரோஸ்கோப் மூலம் எடுத்துவிடலாம் என பார்த்தேன். அப்போது 4 தேனீக்கள் உள்ளே இருந்ததை கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தேன்.

பின்னர் மெதுவாக அவரது கருவிழிகளுக்கு எவ்வித பாதிப்புமின்றி தேனீக்களை எடுத்தேன். அவை உயிருடன் இருந்தன. உலகிலேயே இது தான் முதல் நிகழ்வு என நினைக்கிறேன் என தெரிவித்துள்ளார். (7)

## தெலுங்கானாவில் மண்சரிவு 10 தொழிலாளர்கள் உயிரிழப்பு



(தெலுங்கானா)

தெலுங்கானாவில் 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் பணியாற்றிய தொழிலாளர்கள் 10 பேர் மண் சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவில் மத்திய அரசு கொண்டு வந்த திட்டங்களுள் ஒன்று மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் ஏரிகள், ஆறுகள், வாய்க்கால்களை துப்பரவுப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன் தினம் தெலுங்கானாவில் உள்ள நாராயண்பேட் மாவட்டத்தில் இந்த திட்டத்தின் கீழ் மக்கள் வழக்கம்போல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி பெண்கள் உட்பட 10 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும் குறித்த மண்சரிவில் படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்துள்ளன. (7)

## பிரேசிலில் கனமழை 10 பேர் உயிரிழப்பு



(பிரேசிலியா)

பிரேசிலின் ரியோ டீ ஜெனிரோ நகரில் கடந்த இரு தினங்களாக இடைவிடாத கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக 10 பேர் பலியானதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரேசிலின் ரியோ டீ ஜெனிரோ நகரில் கடந்த இரு தினங்களாக இடைவிடாது கனமழை கொட்டி தீர்த்தது. நேற்று மட்டுமே 31 செ.மீ. அளவுக்கு மழை பெய்தது.

இதனால் அந்த நகரம் வெள்ளக்காடாகி இருக்கிறது. நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கி தத்தளிக்கின்றன. வீதிகளில் இடுப்பு அளவுக்கு தண்ணீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது.

மழையின் போது பலத்த காற்று வீசியதில் மரங்கள் வேரோடு சாய்ந்தன. மின் கம்பங்கள் சரிந்து விழுந்தன. இதனால் மின் இணைப்பு, தகவல் தொடர்பு உள்ளிட்டவையும் துண்டிக்கப்பட்டுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீடுகளை இழந்த மக்கள் பாதுகாப்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக 10 பேர் பலியானதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட பகுதிகள் முழுவதிலும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீட்பு குழுவினர் துரித கதியில் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

## இந்தோனேசியாவில் சுரங்க நிலச்சரிவு ஐந்து பேர் பலி; இரண்டு பேர் படுகாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் கலிமந்தன் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 5 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

இந்தோனேஷியாவில் தற்போது பலத்த மழை பெய்து வருகின்ற நிலையில் நாடு முழுவதும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்நிலையில், மத்திய பகுதியில் அமைந்துள்ள கலிமந்தன் மாகாணத்தில் நேற்று புதன்கிழமை நிலச்சரிவு ஏற்பட்டது.

இதன்போது அம்மாகாணத்தில் [illegible] இதில் அங்கு வேலை செய்து கொண்டிருந்த ஊழியர்கள் சிக்கினர். இதன்போதே ஐவர் உயிரிழந்ததோடு இருவர் காயமடந்தனர்.

குறித்த பகுதியில், தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன என பேரிடர் மேலாண்மை குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லசந்த விக்கிரமதுங்க படுகொலை

# குற்றவாளிக்குத் தண்டனை வழங்கும் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை



## அரசு மீது செஹான் பாய்ச்சல்

(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்களின் படுகொலையை ஐக்கிய தேசியக் கட்சி 2015ஆம் ஆண்டு ஒரு தேர்தல் பிரசாரமாக முன்னெடுத்து ஆட்சிக்கு வந்தது.

குற்றவாளிக்குத் தண்டனை வழங்குவதாக குறிப்பிட்டமையும் ஒரு தேர்தல் பிரசாரமே. இன்று வரை கொடுத்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஏமாற்றமடைந்துள்ள மக்கள் ஐக்கிய தேசிய கட்சி வழங்கிய வாக்குறுதிகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ போட்டியிடுவதை தடுக்கும் உபாயங்களை அரசாங்கம் தற்போது தேடுகின்றது.

2015ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையில் மகிந்த அரசாங்கத்திற்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுகள் எதுவும் இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

கோத்தபாயவிற்கு எதிராக எழுந்துள்ள தடைகளை எதிர்கொண்டு நிச்சயம் ஆட்சி மாற்றம் இடம்பெறும் என அவர் இதன்போது மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதிய பேருந்து தரிப்பு நிலையம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு

(பொலநறுவை)

"எழுச்சிபெறும் பொலநறுவை" மாவட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் 501 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கதுறுவெல புதிய பேருந்து தரிப்பு நிலையத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் மக்களின் பாவனைக்காக திறந்து வைத்தார்.

ஊடகவியலாளர்களுக்கு இலவச பிரயாண சீட்டுக்களை வழங்கும் செயற்றிட்டமும் இதன்போது ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (இ-7)



## பட்ஜெட்டிற்கு வாக்களிக்காமல் விலகியது ஏன்?

# ஒரு மாதத்திற்குப் பிறகு பிரதிபலன் வெளிப்படும்

## சு.க.எம்.பி. திலங்க விளக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் வாக்களிக்காமல் விலகிக் கொண்டமையின் பிரதிபலன் இன்னும் ஒரு மாதத்திற்கு பிறகு வெளிப்படும்என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

பரந்துபட்ட கூட்டணியமைத்தலுக்கான மூன்றாவது பேச்சுவார்த்தை எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



வரவு - செலவுத் திட்டத்தை வெற்றிக் கொள்ள செய்து ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விலகிக் கொள்ளவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மூன்று அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டை பாதுகாக்க வேண்டிய தேவை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு காணப்பட்டது.

மறுபுறம் பல அரசியல் ரீதியான விடயங்களும் ஆராயப்பட வேண்டியிருந்தது. இவ்விடயங்களை கருத்திற் கொண்டு வரவு-செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் விலகிக் கொண்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அறுவைச் சிகிச்சையில் ஒரு சாதனை

தருமம் தலைகாக்கும் என சொல்லுவார்கள். ஒருத்தர் தர்மம் பண்ணினால் அது அவருடைய தலைமுறையையே காப்பாற்றும் என அதற்கு விளக்கம் சொல்பவர்களும் உண்டு. அது ஒரு பக்கம் இருந்தாலும் தலை நம்ம உடம்பிலே மிகவும் முக்கியமான ஒரு பாகம். தலையை காப்பாற்றினால் உடம்பையே காப்பாற்றியது மாதிரி. யாராவது அடிபட்டு வைத்தியசாலைக்குப் போனால் முதலில் தலையில் ஏதாவது அடிபட்டிருக்கின்றதா? என்று கவனிப்பார்கள். தலையில் அடிபடுகின்றவர்களை உடனடியாக கவனிப்பதற்கு வைத்தியசாலைகளில் தனிப்பிரிவே இருக்கின்றது. அது இருக்கட்டும்.

இப்பொழுது நான் சொல்ல வந்த விடயம் என்னவென்றால் ஒருத்தருக்கு மண்டை ஓடு உடைந்து மூளையே கொஞ்சம் சிதறிப் போய்விட்டது! அவரை காப்பாற்றிவிட்டார்கள்.இது ஒரு அதிசயமான விடயம்.மருத்துவத் துறையில் இது பெரிய சாதனை.

தென் அமெரிக்காவின் பொலிவியாவில் ஒரு இளைஞன் தன்னுடைய நண்பனின் வீட்டிற்குப் போனார்.போனவர் சும்மா இருக்காமல் நண்பனின் அப்பாவுடைய துப்பாக்கியை கையில் எடுத்து வைத்துக் கொண்டு ஏதோ செய்திருக்கின்றார்.துப்பாக்கி வெடித்துவிட்டது.இந்தப் பையனுடைய இடது கண்ணுக்கு மேலே குண்டு பாய்ந்து தலையை துளைத்து பின் பக்கமாக வெளியேறி விட்டது.

உடனே வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்றிருக்கின்றார்கள். அங்கு அறுவைச் சிகிச்சை நடந்திருக்கின்றது.அவர் உயிர் பிழைத்துக் கொண்டார். இருந்தாலும் வலது பக்க உறுப்புக்கள் பக்கவாதத்தால் பாதிக்கப்படும் என்றும் அவருக்கு பேச்சு வராது என்றும் டாக்டர்கள் சொல்லிவிட்டார்கள். அவர் இரண்டு மாதங்கள் சுயநினைவு அற்று இருந்தார்.பின்பு மெதுவாக நினைவு திரும்பியது. லேசாக நடமாடினார்.திக்கித்திக்கி பேசினார். இடது கையாலே எழுத ஆரம்பித்தார்.

டாக்டர்களுக்கு கொஞ்சம் ஆச்சரியம் தான். ஏன் என்றால் அவர் தலையில் காயம் ஆறிப் போய்விட்டதே தவிர, மூளையைப் பாதுகாக்க மண்டை ஓடு இல்லை. ஓட்டுக்குப் பதிலாக அந்த இடத்தில் மெல்லியதாக தழும்புச் திசுமட்டும் இருந்ததாம்.ஏதாவது கூரான பொருள் தலையில் விழுந்தால் அது உடனே உள்ளே போய்விடும். உயிருக்கு ஆபத்து.

டாக்டர்கள் யோசனை செய்தார்கள்.அந்த இடத்தில் ஒரு மண்டை ஓட்டை வைக்க நினைத்தார்கள்.ஆனால் ஓட்டிற்கு எங்கு போவது?

அந்த இளைஞரை அமெரிக்காவுக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். தலையை எங்கேயும் இடித்துக் கொள்ளாமல் மினிசோட்டா மாநிலத்தில் செயின்ட்போல் என்று ஒரு நகரம். அங்கே ஜோசப் ஸ்கோவ், பிராங்பில்னே என்று இரண்டு வைத்தியர்கள். இவர்கள் தான் அந்த அபூர்வ சிகிச்சை செய் தார்கள்.

மண்டை ஓடு இல்லாத இடத்திலே புதிதாக எலும்புகளை வைத்துப் பொருத்தி விட முடிவு செய்தார்கள். அப்படி வைத்தால் அதை மூடுவதற்கு தோல் வேணுமே. அதற்கு எங்கே போறது? ஏற்கனவே மண்டையில் இருக்கின்ற தோலை ஒரு விசேட கருவி மூலமாக இதை இழுத்து பெரிதாக்க பல மாதங்கள் ஆகிவிட்டது.

மண்டை ஓட்டில் வலது பக்கத்தில் ஒரு பகுதியை வெட்டி எடுத்து அதை குறுக்கே அறுத்து இரண்டு சில்லாக்கி ஒரு சில்லை பழைய இடத்திலேயே வைத்து மூடினார்கள். இன்னொன்றை அடிபட்ட இடத்தில் வைத்து மூடினார்கள் .அது போதவில்லை. இன்னும் கொஞ்சம் தேவைப்பட்டது. வலது விலா எலும்பிலிருந்து கொஞ்சம் எடுத்து அந்த இடத்தில் வைத்தார்கள். ஏற்கனவே நீட்டி வைத்திருந்த தோலை இடது பக்க காது வரைக்கும் நன்றாக இழுத்து மூடிவிட்டார்கள். அவ்வளவுதான் கொஞ்ச நாள் வைத்தியசாலையில் இருந்து விட்டு வீட்டுக்கு வந்துவிட்டார்.

வலது கைவிரல் மட்டும் மூடியபடி இருக்கின்றதாம். மற்றபடி எதுவித குறையும் இல்லையாம்.வைத்தியர்கள் அதிசயப்பட்டார்கள். இந்தளவுக்கு அடிபட்ட ஒருத்தர் முன்னேறி உயிருடன் இருப்பது பெரிய அதிசயம் தான் என்று டாக்டர்கள் சொன்னார்கள். தருமம் தலை காக்கும் என்பதை நான் அனுபவ பூர்வமாக புரிந்துகொண்டேன் என்றார் ஒருத்தர்.

எப்படி என்று கேட்டார் இன்னொருத்தர். நான் செய்த தருமம் தான் என் தலையைக் காப்பாற்றியிருக்கின்றது என்றார்.

கொஞ்சம் விபரமாகத்தான் சொல்லுங்களேன் என்றார் இவர்.நேற்று இராத்திரி ஒரு முகமூடி திருடன் எங்க வீட்டுக்கு வந்தான். ஒரு விறகு கட்டையை எடுத்துக் கொண்டு என் தலையில் அடிக்க வந்தான். அதற்கு முன்னால் நான் என்னிடம் இருந்ததையெல்லாம் எடுத்து அவனிடம் தருமம் செய்து விட்டேன் அந்த தருமம் தான் என் தலையை காப்பாற்றிவிட்டது என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள் - 2019

## 14.04.2019 முதல் 13.04.2020 வரை



**மகர இராசி நேயர்களே!**

விகாரி வருடம் பிறக்கும் பொழுதே உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் இருக்கின்றார். அவரோடு குருவும், கேதுவும் இணைந்திருக்கின்றார். எனவே சுபவிரயங்கள் அதிகரிக்கும் வருடமாக இந்த வருடத்தைக் கருதலாம்.

புத்திரகாரகன் குரு விரய ஸ்தானத்தில் தனது சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி செலவிடும் சூழ்நிலை அதிகரிக்கும்.

6 இல் இராகு இருப்பதும், அதைக் குரு பார்ப்பதும் சிறப்பானதாகும். எனவே அஷ்ட லட்சுமி யோகம் உங்களுக்கு செயற்படப் போகின்றது. எதிர்பார்த்த தொகை உங்களுக்கு எதிர்பார்த்த படியே வந்து சேரும்.

வருடத்தொடக்க நாளில் சப்தம ஸ்தானாதிபதி சந்திரன் சப்தம ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கின்றார். எனவே கல்யாணக்கனவுகள் நனவாகும் ஆண்டாகவே இந்த ஆண்டு அமையப்போகின்றது. திருமணம் பேசுகின்றவர்களுக்கு சர்ப்பதோஷம் இருக்கின்றதா? செவ்வாய் தோஷம் இருக்கின்றதா? 7 இல் சனி இருக்கிறாரா? அல்லது சனி செவ்வாய் பார்வை அல்லது சேர்க்கை இருக்கின்றதா என்பதை எல்லாம் அலசி ஆராய்ந்து பொருத்தம் பார்ப்பதே உத்தமம்.

**தனுசு குருவின் சஞ்சாரம்**

**(14.4.2019 முதல் 17.5.2019 வரையிலும், மீண்டும் 28.10.2019 முதல் 13.4.2020 வரையிலும்)**

இக்காலத்தில் குருவினுடைய பார்வை 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிகின்றது. சுக ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் சுகக்கேடுகள் அகலும். தன்னம்பிக்கை கூடும். தாய்வழி ஆதரவோடு தனித்து இயங்க முற்படுவீர்கள். வாகனங்களை வாங்கும் யோகம் உண்டு. எதிரிகள் விலகிச் செல்வர். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் உன்னதமான இடம் அமையும். உதிரி வருமானம் பெருகும். உழைப்பிற்கேற்ற பலனும் கிடைக்கும். பணிநிரந்தரம் பற்றிய தகவல் ஒருசிலருக்கு வந்து ஆச்சரியத்தில் ஆழ்த்தும். கூடுதல் சம்பளத்திற்கு வெளிமாநிலங்களுக்குச் செல்லலாமா என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது நண்பர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரப்போகின்றது.

4 ஆம் இடம் என்பது தாய் ஸ்தானம் என்று கருதப்படுவதால் தாய்வழி ஆதரவு கூடுதலாக இருக்கும். உறவினர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். திறமை பளிச்சிடும் இந்த நேரத்தில் கேட்ட இடத்தில் உதவிகளும் கிடைக்கும். கூட்டு முயற்சிகளில் இருந்து விலகி தனித்தியங்க முற்படுவீர்கள். வீடுகட்ட வேண்டும் அல்லது வாங்க வேண்டும் என்று சிந்தித்தவர்களுக்கு பூமியோகம் இப்பொழுது செயற்படப்போகின்றது.

6 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் பக்கபலமாக இருக்கும் நண்பர்கள் பணமழையில் நனைய வழிவகுத்துக் கொடுப்பர். சிக்கல்கள், தீரும். சிரமங்கள் மாறும். தக்க விதத்தில் பொருளாதார நிலை உயரும். பரம்பரைச் சொத்துக்களில் இருந்த சண்டை சச்சரவுகள் அகன்று சமாதானக் கொடிபறக்கப் போகின்றது. வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். மனக்கசப்புகள் மாறும்.

என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு விலை உயர்ந்து விற்பனையாகி மிதமிஞ்சிய பொருளாதாரத்தை உருவாக்கப் போகின்றது. முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர். உடல் ஆரோக்கிய குறைபாட்டின் காரணமாக ரண சிகிச்சை செய்துதான் குணமாக்க வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள் இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே குணமாக்கிவிடுவர்.

போராட்டநிலை மாறும். மனப் போராட்டங்கள் அகலும். மதிப்பும், மரியாதையும் உயரும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சிகள் வெற்றி தரும். உத்தியோகம் பார்த்த இடத்தில் இடமாற்றங்கள் பரிசீலனையில் இருக்கலாம். இப்போது அது உறுதியாகி எதிர்பார்த்தபடியே இட மாற்றமும் கிடைக்கும். அலைச்சல் அதிகரித்தாலும் ஆதாயம் உண்டு.

உழைப்பு மட்டும் அதிகரிக்கும் நேரமிது. உணவு உண்ணும் நேரம் கூட ஒதுக்க முடியாத அளவிற்கு உத்தியோகத்தில் வேலைப்பளு கூடலாம். எனவே ஆரோக்கியத்தில் சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். பொதுவாக கை, கால்களில் வலி ஏற்படலாம். உங்களுடைய ஆற்றலை வெளிக்கொணர வைக்கும் நேரத்தில், மூட்டுவலி, முழங்கால்வலி போன்றவைகள் ஏற்பட்டு அவதிப்பட வைக்கலாம். எனவே இக்காலத்தில் குரு பிரீதி செய்வது நல்லது.

**விருச்சிக குருவின் சஞ்சாரம்**

**(18.5.2019 முதல் 28.10.2019 வரை)**

இக்காலத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். குறிப்பாக 7.8.2019 வரை வக்கிர இயக்கத்திலும் பிறகு வக்கிர நிவர்த்தியாகி விருச்சிகத்திற்குள்ளேயே உலா வருகின்றார். இதன் பலனாக உங்களுக்கு நல்ல மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது. குருவின் பார்வை 3, 5, 7 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே வெற்றிகள் ஸ்தானம், புத்திர ஸ்தானம், களத்திர ஸ்தானம் ஆகிய மூன்று இடங்களும் புனிதமடைகின்றன. எனவே உடன்பிறப்புகள் உங்களுக்கு உறுதுணையாக விளங்குவர்.

உங்கள் தொழில் முயற்சிக்கு அவர்களது மேற்பார்வை கைகொடுக்கும். நீண்ட நாட்களாக விலகியிருந்த சொந்தங்கள் எல்லாம் இப்பொழுது சமரசத்திற்கு முன்வருவர். பஞ்சாயத்துக்களும், பாகப்பிரிவினைகளும் இனி சாதகமாக முடியும். தொழிலில் சகோதர கூட்டுக்கள் உருவாகலாம்.

5 ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் புத்திரப்பேறுக்காக காத்திருப்பவர்களுக்கு அது கைகூடலாம். மேலும் புத்திரப்பேறு வாய்க்காதவர்கள் இப்பொழுது பஞ்சமாதிபதி இருக்கும் பாதசார பலமறிந்து அதற்குரிய ஸ்தல வழிபாடுகளை முறையாக மேற்கொண்டால், புத்திரப்பேறு வாய்க்கும். கல்யாண வயதடைந்த பிள்ளைகளுக்கு திருமணப் பேச்சுக்கள் முடிவாகி ஊரார் வியக்கும் விதத்தில் உன்னதமாக திருமணங்களை நடத்திக் காட்டுவீர்கள். மேற்படிப்பிற்காக பிள்ளைகள் வெளிநாடு செல்ல நினைத்தால் அதற்காக செய்த முயற்சிகள் கைகூடும்.




**ஜோதிட கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சப்தம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் இல்லறம் இனிதாக அமையும். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளைப் போக்க முன்வருவீர்கள். வெளிநாட்டு யோகம் விரும்பியபடியே அமையும். மனையில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும் நேரமிது.

அயல்நாட்டு பயணங்களும் கை கூடலாம். உத்தியோகத்தில் உள்ள சக பணியாளர்களும் வெளிநாடு சென்று வந்து கொண்டிருக்கிறார்களே. நம்மை நம்முடைய தொழில் நிலையம் வெளிநாடு அனுப்ப முன்வரவில்லையே என்று நினைக்கலாம்.

ஏழரைச்சனி நடக்கின்ற பொழுது நீங்கள் வெளிநாடு சென்றாலும் நிம்மதி கிடைக்காது. பெரும் தொகையொன்றை பணம்கட்டிவிட்டு சென்று பின்பு வேலை கிடைக்காமல் திரும்பும் சூழ்நிலை சிலருக்கு உண்டு. எனவே பயணம் செய்பவர்கள் தங்கள் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்துவிட்டுச்செல்வது நல்லது.

**சனியின் சஞ்சார நிலை**

ஆண்டு முழுவதும் சனி பகவான் உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் தான் இருக்கின்றார். விரயச்சனியாக உலா வருகின்றார். இடையில் 8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு இராசியிலேயே வக்கிரம் பெறுகின்றார். சனியின் பார்வை 2, 4. 9 ஆகிய இடங்களில் பதிகின்றது. உங்கள் இராசி நாதனாகவும், தனாதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் உங்களுக்குரிய பலன்களையே வழங்குவர். இக்காலத்தில் செலவுகள் கூடுதலாக இருக்கும். சிறுசிறு பிரச்சினைகளை வளரவிடாமல் பார்த்துக்கொள்வது நல்லது. குடும்ப உறுப்பினர்களுக்கு நீங்கள் என்னதான் பாடுபட்டுக் காரியங்களை முடித்துக்கொடுத்தாலும் அவர்கள் நன்றிகாட்ட மாட்டார்கள். சனியின் வக்கிர காலத்தில் கவனம் தேவை.

**இராகு-கேதுக்களின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் இராகுவும், 12 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். சாயா கிரகங்கள் என்று வர்ணிக்கப்படும் அந்தக் கிரகங்கள் இருக்கும் இடத்தையும், அந்த இடத்திற்கு அதிபதியையும் பொறுத்தே பலன்கள் கொடுக்கும். குறிப்பாக கேதுவோடு கூடியிருக்கும் குரு, இராகுவைப் பார்க்கின்றார்.

எனவே தோஷங்கள் அனைத்தும் அகன்று யோகங்கள் உங்களுக்கு வரப்போகின்றது. தேக நலனில் தெளிவு பிறக்கும். செல்வ நிலை ஒருபடி உயரும். வேகமாக சில காரியங்கள் முடிவடையலாம். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்யும் கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**சனி-செவ்வாய் பார்வைக்காலம்**

**(14.4.2019 முதல் 23.6.2019 வரை)**

இக்காலம் நீங்கள் எச்சரிக்கையோடு இருக்க வேண்டிய காலமாகும். கட்டிய மனையால் தொல்லை, கடமையில் தொய்வு ஏற்படும். ஒட்டி உறவாடிய நண்பர்கள் உங்களை விட்டு விலகுவர். ஊர் மாற்றங்களில் ஆர்வம், சகோதர சச்சரவுகள் போன்றவற்றைச் சந்திக்கும் நேரமிது. தாய் வழி ஆதரவு குறையும். இடம், பூமியால் சில சிக்கல்கள் உருவாகலாம். பத்திரப்பதிவில் பிரச்சினை, பிறரை விமர்சிப்பதிலும் தொல்லைகள் ஏற்படலாம்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த ஆண்டு குடும்பச்சுமை கூடுதலாகத்தான் இருக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் நிதானம் தேவை. விரய ஸ்தானத்தில் மூன்று கிரகங்கள் இருப்பதால் எதைச் செய்தாலும் யோசித்துச் செய்வது நல்லது. குடும்ப உறுப்பினர்களை கலந்தாலோசித்துச் செய்தால் பிரச்சினைகள் ஏற்படாது. கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும், என்றாலும் கருத்து வேறுபாடுகளும் அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதுதான் நல்லது. புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்க்கும் விதம் நடந்து கொள்வது நல்லது. தாய்வழி ஆதரவு திருப்தியாக இருக்கும். சகோதர வர்க்கத்தினரில் ஒரு சிலர் மட்டுமே உங்களுக்கு உதவியாக இருப்பர். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதித் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்கள் எளிதில் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களுக்குரிய சலுகைகளை வழங்குவர். வாகன மாற்றம் செய்வது நல்லது. குலதெய் 'வழிபாடும், குரு, சனி, ராகு, கேதுக்களின் வழிபாடும் கூடுதல் நன்மையை வழங்கும்.

**வருடம் முழுவதும் வசந்தகாலமாக வழியாடு**

வெள்ளிக்கிழமை தோறும் விநாயகர் கவசம் பாடி சர்ப்ப விநாயகரை வழிபடுவது நல்லது. சங்கடஹர சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபட்டால் சங்கடங்கள் தீரும். சந்தோஷங்கள் சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# பாம்புகளை அடையாளம் காண்போம்

## வடமாகாணத்தில் காணப்படும் சில பாம்பினங்கள்

(22.02.2019 திகதியின் தொடர்ச்சி...)

இனி வடமாகாணத்திலுள்ள அதிகூடிய விஷத்தன்மையுள்ள பாம்பினங்களில் ஒன்றாகக் காணப் படும் இன்னொருவகை நச்சுப் பாம்பான நாகபாம்மைப்பற்றிப் பார்ப்போம். வடமாகாணத்தைப் பொறுத்தமட்டில் நாகபாம்பு என்பது தமிழர்களின் கலாசாரத்தில், சமய நம்பிக்கைகளில், ஜோதிட சாஸ்திர ங்களில் இணைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. அத்துடன் காலாதி காலமாக தமிழர்கள் யாவராலும் மிகவும் மதிப்பளிக்கப்பட்டு பய பக்தியுடன் பார்க்கப்படுவதற்குக் காரணம் இலங்கைதீவின் ஆதிக் குடிகளான நாகர், இயக்கர் காலத் துடனான தொடர்பாகக்கூட இருக்க லாம். இதைவிட சைவசமய, வைஷ் ணவ சமய சம்பிரதாயங்களிலும் வழிபாடுகளிலும் நாகபாம்பிற்கு மிகவும் உன்னதமான இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவைதவிர உளவியல் நம் பிக்கைகள் காரணமாகவும் நாக பாம்புகள் கடுமையான விஷமு டையதாய் இருந்தாலும் இவை கொல்லப்படவேண்டுமென்ற கோணத்தில் மக்களால் பார்க் கப்படுவதில்லை.

**நாகபாம்பு / நல்லபாம்பு - உரு. 20 (Naja naja - Indian cobra / Common cobra)**

இது இலங்கையின் தாழ் நிலப் பரப்புக்களிலிருந்து மலைப் பிர தேசங்கள்வரை, வறள்வலயத்தி லிருந்து ஈரவலயம்வரை பரந்துள் ளன. இவை யாவும் தரைவாழ்க் கையையும் மரவாழ்க்கையையும் சேர்த்துக் காட்டக்கூடியவை. இவை அழுத்தமான மினுமினுப்பான செதில்களைக் கொண்டவை, கிட்டத் தட்ட 5-6 அடிவரை வளரக் கூடி யவை. தலைக்குக் கீழாக அகன்ற கழுத்துப்பகுதி, வயிற்றுப்புறமாக அதிலுள்ள கறுப்புப் புள்ளிகள் அதற் கும் கீழாக கறுப்புப்பட்டை என்பன வும் கழுத்தின் முதுகுப்பகுதியில் தலைகீழாக இணைந்து காணப் படும் / குறியீடு அல்லது மூக்குக் கண்ணாடி போன்ற குறியீடு என் பனவற்றைக் கொண்டும் இதனை இலகுவாக அடையாளம் காணலாம் (பார்க்க உரு. 20). இவை பிரதா னமாக 4 வர்ணங்களில் காணப்படு கின்றன. மஞ்சள் கலந்த கபிலநிறம், கடுமையான கோப்பி அல்லது கரும்நிறம், செங்கட்டிச் சிவப்புநிறம் மற்றது வெள்ளை நிறம். இவற்றை முறையே சுவாமி நாகம், கருநாகம், செந்நாகம், வெள்ளை நாகம் என அழைக்கிறார்கள்.

இவை மிக இலகுவாக எப்படிப் பட்ட வாழிடத்திற்கும் தம்மைப் பழக் கப்படுத்திக் கொள்ளக்கூடியவை. அதாவது இவை தரையில் (கற்கு வியல்களிங்கிடையில்), தரைக் குக் கீழாக (எலிவளைகள், கறையான் புற்றுகள், சுரங்கங்கள்), மரத்தில் (மரப்பொந்துகள்) போன்ற எல்லா இடங்களிலும் இவை காணப்படலாம். அத்துடன் தாம் இருக்கும் இடங்களின் தன்மைக்கேற்ற வித்தில் தம்மு டைய பழக்கவழக்கங்களையும் மாற்றிக்கொள்ளக்கூடியவையாக வும் காணப்படுகின்றன. உதாரண மாக மனித நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் வாழும் நாகபாம்புகள் பொதுவாக இராவழக்கத்தைக் கடைப் பிடிக்கும். அதேபோல் காடுகள் மற்றும் அமைதியான இடங்களில் இருப்பவை பொதுவாக பகலில் நடமாடும்.

நடத்தை: இவை அதிகூடிய விஷத்தன்மையுள்ள பாம்பாக இரு ந்தாலும் அதிகூடிய சகிப்புத் தன்மை யைக்கொண்டவை. ஆண்டுதோறும் பாம்பு தீண்டி விளையும் மனித இறப்புக்களிற்குக் காத்திரவாளிகள் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் இவை கூச்ச சுபாவம் கொண்டவை என்பதும் மனிதநடமாட்டத்தை விட்டு விலத்திச் செல்லவே விரும்பு பவை என்பதும் ஆச்சர்யமான உண்மைகள். உதாரணமாக அவற் றின் வாழிடத்தினுள் புதிய நபரொ ருவர் நுழைந்ததை அறிந்து கொண் டதும் (அது வேறு விலங்காக இருந் தாலும் மனிதராகவே இருந்தாலும்) முதலில்தாம் அங்கு இருப்பதைக்காட்டு வதற்காக இருக்கும் இடத்திலிருந்து மேலெழும்பி கழுத்துப்பகுதியை அகல விரித்து காட்டி எச்சரிக்கை செய் யும். இதனையே படம் எடுத்தல் என் கின்றோம். அந்நபர் அதனை மதிக் காமல் மீண்டும் முன்னேறினால் வாயினூடாக காற்றை வேகமாக வெளியேற்றி "ஸ்ஸ்ஸ்..." என்ற ஓசையை எழுப்பும். இதையும் புதிய வர் கவனிக்காமல் விட்டால் தான் இறுதியாகக் கடிக்க முற்படும். இவற் றின் சகிப்புத்தன்மையாலேயே இதனை நல்லபாம்பு என அழைக்கிறார் கள்.

இவை வைகாசி தொடக்கம் ஆடி மாதம்வரை முட்டையிடுகின்றன. எலிவளைகள், கறையான் பொந்து கள் போன்றவற்றை முட்டையிடுவ தற்காக தேர்ந்தெடுக்கின்றன. பின் னர் அவ்விடத்தைப் பாதுகாத்தபடி கிட்டத்தட்ட 2 மாதம்வரை இருக் கும். இதனையே அடை காத்தல் என்கின்றோம். இக்காலங்களில் பொதுவாக இவை ஆக்ரோஷமாகக் காணப்படும். அடை காக்கும் இடங்க ளிலிருந்து மனிதர்களைச் சற் றுத்தூரம் துரத்திவந்த சம்பவ ங்களும் இருக்கின்றன. சிறியவை யாக இருக்கும்போது சிறிய பூச்சிகள், நகருயிர்கள், சிறிய பாம்புகள் போன் றவற்றை உண்ணும் வளர்ந்தவை கள் பெரிய தவளைகள், முட்டைகள், எலிகள் போன்றவற்றைப் பிரதா னமாக உள்ளெடுக்கும். அறுவடைக் காலங்களில் இரைகளைத்தேடி இவையும் வயல்நிலங்களை நாடி வருகின்றன. இனி இதன் பெயரை யொத்த விஷமற்ற ஓர் பாம்பைப் பற்றி அறிவோம்.



உரு.20 கழுத்துப்பகுதியை அகல விரித்தபடி இருக்கும் நாகபாம்பின் நிலைகள். a.சங்கு சக்கரம் என்று வர்ணிக்கப்படும் இரு புள்ளிகள், C- குறியீடு தலைகீழாக இணைந்து காணப்படும் நிலை.

**நீர்நாகம் / நீர்கோத்தை - உரு. 21 (Xenochrophis piscator – Checkered keelback)**

இதுவடமாகாணத்திலுள்ள அனை த்து மாவட்டங்களிலுமுள்ள குளங் கள், கிணறுகள், நீர்த் தடாகங்கள் மற்றும் அருவிகள் போன்றவற்றில் சாதாரணமாக அவதானிக்கக் கூடிய ஒன்றாக இருப்பதுடன் இலங்கை யின் பலபாகங்களிலும் தமது பரம்ப லைக் காட்டுகின்ற ஓர் பாம்பாகும். இவற்றை இலகுவாக அடையாளம் காண்பதற்கு பின்வருவனவற்றை சொல்லலாம். இவற்றின் கண்களிற் கடியிலும் பின்புறமாகவும் இரண்டு சிறிய கரியகோடுகள் காணப்படும். உடலை மூடியுள்ள செதில்கள் யாவும் ஏரா அமைப்பைக் கொண்டிருக்கும். உடலின் நிறம் மஞ்சள் கலந்த கபில த்திலிருந்து கரிய நிறம்வரை வேறு படும். அதில் மஞ்சள், வெள்ளை, கறுப்பு நிறங்களில் சிறிய சதுரவடிவ குறி யீடுகள் காணப்படும்.

நடத்தை: இவற்றிற்கு சுறுசு றுப்பாக இயங்குவதற்கு நேரக்கட் டுப்பாடு என்று இல்லை. நாள்முழு வதும் இவற்றால் இயங்கமுடியும். பகல்வேளைகளில் நிச்சயமாக அவ தானிக்கலாம். இது நீர்ப்பாம்பாக இருந்தாலும் இரவு நேரங்களில் தரையிலேயே அதாவது வயல்வரப் புக்களிலும் குளக்கரைகளிலும் அதிக நேரத்தை செலவிடும். குளத்திலுள்ள நீர்மட்டம்குறையத் தொடங்கியதுமே அங்கிருந்து வெளியேறி அவற்றிற்கு அண்மையாகவுள்ள கற்குவியல்கள், பாறைகள் போன்றவற்றிற்கு இடை யில் போய் ஒளிந்து கொள்ளும்.


இவை இலகுவில் அருட்டப்படக் கூடியதெனினும் சரியாகக் கையா ளும்போது உடனடியாக சாந்தமாகி விடக்கூடியவை. அருட்டப்படும்நேரங் களில் கடிக்க முயலுவதுடன் கழுத்தி லுள்ள விலா என்புகளை வெளித் தள்ளி தட்டையான அகன்ற கழுத் துடன் முன் பாதியுடலை உயர்த்தும். (பார்க்க: உரு 21). இது பார்ப்பதற்கு நாகபாம்பைப் போல இருப்பதால்நீர் நாகம் எனப் பெயர்பெற்றிருக்கலாம். அதேபோல நீர்கொத்தி தான் நீர்கோத்தையெனத் திரிபடைந் திருக்கலாம் எனத் தோன்றுகிறது. இவை நீர்ப்பாம்பாக இருந்தாலும் முட் டைகளை நீரில் இடுவதில்லை. மாறாக தரை, கிணற்றுச் சுவரி லுள்ள பொந்துகள் போன்றவற் றைத் தேடி அதனுள் இடுகின்றன. முட்டையிலிருந்து வெளிவருபவை நீர்ப்பூச்சிகள், வாற்பேத்தைகள் போன்றவற்றை உண்டாலும் வளர்ந்தவைகள், மீன்கள், நண்டு கள் மற்றும் நத்தைகள் போன்ற வற்றைப் பிரதானமாக உள்ளெ டுக்கும். இறுதியாக இதன் பெயரை யொத்த வீரியம் குறைந்த விஷ த்தைக் கொண்ட ஓர் பாம்பைப் பற்றி அறிவோம்.



உரு.21 நீர்க்கோத்தையின் கண்களுக்கடியிலும் பின்புறமாகவுள்ள சிறிய கரிய கோடுகள் மற்றும் அகன்ற கழுத்துடன் உள்ள நிலை

**பறநாகம் - உரு. 22 (Chrysopaleatabrobanica - Sri Lankan flying snake)**

இது கடைவாய் பகுதியில் விஷப்பற்களைக் கொண்ட ஓர் பாம்பாகும். ஆகவே மனிதர்களி ற்கு இவற்றினால் ஆபத்து கிடை யாது என்றே சொல்லலாம். இது வடமாகாணத்தில் முன்பு யாழ்ப் பாணத்தில் காணப்பட்டதாயினும் தற்போது வவுனியாப் பகுதிகளி லேயே காடுகளையண்டிய பிரதேச ங்களில் காணப்படுகின்றது. பெய ரிற்கேற்றாற்போல இவற்றால் பறக்க முடியும். இவை மர வாழ் க்கையைக் காண்பிப்பன. ஓர் மரத் திலிருந்து இன்னொரு மரத்திற்குச் செல்லுவதற்கும் பிரதானமாக எதிரிகளிடமிருந்து தப்புவதற்கும் இவை தமதிடத்திலிருந்து தாவு கின்றன. இவை உண்மையான பறத்தல் கிடையாது. ஆனால் இவை தாவும்போது உடலிலுள்ள விலா என்புகளை வெளித்தள்ளு வதன்மூலம் உடலை இருமடங்கு தட்டையாக்கி வளி மண்டலத்தி னூடாக உந்து சக்தியைப் பயன்ப டுத்தி மிக வேகமாகப் பயணிக்க முடியும். இதன் மூலம் கிட்டத்தட்ட 200மீற்றர் வரை பறந்த தரவுகள் பதியப்பட்டுள்ளன. இலங்கையில் இப்படிப்பட்ட இரண்டு இனங்கள் காணப்படுகின்றன.



உரு.22 பறநாகமொன்றின் முதுகுப்புற தோற்றம்

இவற்றுள் இங்கு காட்டப்பட்ட இனமே தாழ்நில உலர் வல யங்களில் காணப்படக்கூடிய இன மாகும். சற்றே நீண்ட, தட்டையான தலையின் குறுக்காக நெருக்கமான கரிய கோடுகள் செல்ல கபில நிற உடலில் மீண்டும் குறுக்கு வரிகள் சற்று ஐதாகப் பரவியிருக்கும். இறுதியாக நான் சொல்ல விரும்பு வது யாதெனில் இவை யாவும் இயற்கையின் வரப்பிரசாதங்கள். இயற்கையை ரசிப்பதற்கு இயற்கை யின் ஒரு அங்கமாகவுள்ள இவற் றையும் வாழ விடவேண்டும் என்பதைத் தெரியப்படுத்தத்தான். (முற்றும்).

கலாநிதி அபிராமி சிவரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

---

**புதிர் 222 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

சரியான விடை தரப்படவில்லை

**புதிர் 222 க்கான கேள்வியும் விடையும்:**

பாம்புகள் தமது தலையை விடப்பெரிய இரையை எவ்வாறு விழுங்குகின்றன?

பாம்பின் தாடையில் காணப்படும் இசைவாக்கமே இதற்குக் காரணமாகும் பாம்பின் தாடை என்புக்கும் மண்டை ஓட்டுக்கும் இடையில் காணப்படும் மேலதிக என்பு, கீழ்த்தாடை என்பு மண்டை ஓட்டிலிருந்து விடுபட்டிருக்கும் அதேவேளை, தசைநார்களால் இணைக்கப்பட்டிருத்தல் சுருங்கி விரியக்கூடிய தோலில் ஏற்படும் சுருக்க விரிவுகள் மற்றும் களத்தில் ஏற்படும் சுற்றுச்சுருங்கல் அசைவு, முள்ளந்தண்டு மற்றும் விலா என்புகளின் அசைவு காரணமாக பாம்புகள் இலகுவாக தமது வாயை விட பருமனான இரையை விழுங்குகின்றன.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 223

பாம்புகளுக்கு காது உண்டா?

புதிர் 223 இற்கான விடைகளை 22.04.2019 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Dr. வி.சா.துளசிதா
விலங்கியல்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 223**

சரியான விடை:-
முழுப்பெயர்:-
முகவரி:-
தொ.பே. இல.
கையொப்பம்:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

219

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)



சேர். ஜேம்ஸ் லோங்டன் Sir. James Longden

இந்த மக்களின் நிலையை யிட்டுக் கவனக்குறைவாக இருந்த அரசாங்க அதிபர் டபிள்யூ.சி. ருவைனத்துக்கு எதிராக இவ் விடயத்தில் குரல் எழுப்பவும் செய்தார்.

1878 ஜனவரி 15 ஆம் திகதியன்று தேசாதிபதி சேர். ஜேம்ஸ் லோங்டன் Sir. James Longden யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது அவரிடம் ருவைனத்தை யாழ்ப்பாணத்திலிருந்து மாற்றம் செய்யும் படி நாவலர் மனுவொன்றை அளித்தார்.

முன்னர் இங்கு குறிப்பிட்டது போன்று, சட்ட நிருபண சபையில் தமிழரின் பிரதி நிதியாகவிருந்த சேர்.மு.முத்துக்குமாரசுவாமிக்கு, ருவைனத்தின் தவறான நிர்வாகத்தையிட்ட தகவல்களை வழங்கி, அதன் வழி அவர் இந்தப் பிரச்சினையை சட்ட நிருபண சபையில் எழுப்பவும் நாவலர் வழி வகுத்தார்.

நாவலர், தமிழ் மக்களின் சமூகநலனில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் என்பதனை இந்த உதாரணங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. அறிஞர்கள் சிலர் நாவலர் தனது சமூகச் செயற்பாடுகளை திபகற்பத்தில் மட்டுமே மேற்கொண்டார் எனக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் நாவலர் செயற்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் காலகட்டத்தையும் கருத்திற் கொள்ளத் தவறியமையால் அவர்களது கண்டனம் பொருத்தமற்றதாகவே தோன்றுகின்றது.

உண்மையில் நாடு முழுவதும் சமூக செயற்பாட்டில் முனைப்பாக இருந்தவர்களுக்கு நாவலர் ஒரு முன்மாதிரியாக இருந்தார். மேலும் நாவலர் தனது சமூகப் பணியில் சாதி,சமயத்தைக் கருத்திற்கொள்ளாது, சமூக இடர்களினால் பாதிக்கப்பட்டவர்களை முதலில் மனிதர் என்ற கண்ணோட்டத்துடனேயே கவனித்தார்.

இவரது இந்த மனப்பாங்கு மக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருந்தது. குறிப்பாக தமிழ் சமூகத்தில் நிலவிய சாதி, சமயம் என்பனவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப் பிரயத்தனப்பட்டவர்களுக்கு உதாரணமாக இருந்தது.

மேலும் நவீன அறிஞர் சிலர் நாவலர் தனது கல்வி,சமய நடவடிக்கைகளில் சாதியம், சமூக அந்தஸ்து என்பவற்றைக் கவனத்திற் கொண்டார் எனக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் நாவலர் மக்களின் சமய, கலாசார, பாரம்பரியங்களைச் சீர்திருத்தம் செய்ய முயற்சித்த போது அவர் பயம், பாரபட்சம் என்பன இன்றி தவறான நடத்தை, அறியாமை, பொய்மை, கபடம் என்பவற்றைக் கடைப்பிடித்தவர்களைக் கண்டித்தார்.

சைவத்திலும் அதன் பிரமாணங்களிலும் அசைக்கமுடியாத நம்பிக்கையைக் கொண்டிருந்த நாவலரை அந்த நம்பிக்கை சைவ சமயத்தின் அடிப்படையான வர்ணாசிரம தர்மத்தைக் கடைப்பிடிக்கச் செய்தது.

வர்ணாசிரம தர்மம் பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நால்வகை சாதிகளைக் கூறுகின்றது. இச் சாதிகள் ஒவ்வொன்றுக்கும் அவர்கள் இறை இரட்சிப்பை அடைவதற்கான பிரத்தியேகக் கடமைகள் வகுக்கப்பட்டுள்ளன.

நாவலர், தான் சைவ தர்மத்தில் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாக, இந்தக் கருத்துக்களைப் பலமாகப் பின் பற்றினார் என்பதனால் அவ்வகையான கொள்கைகளுக்காக அவரைக் கண்டனம் செய்வது சிரமமாகின்றது

அப்படியிருந்தும் கூட அவரது சமூக செயற்பாடுகள் சாதி, சமயப் பிரச்சினைகளைப் பெரிதாகத் தூக்கிப் பிடிக்கவில்லை. எனவே அறிஞர்கள் தெரிவிக்கும் கண்டனம் சந்தேகத்திற்குரியது.

இங்கு முக்கியம் என்னவெனில் நாவலர் இக் காலகட்டத்தில் தமிழ் மக்கள் அனைவரையும் சாதி, சமய வகுப்பு என்ற பேதங்களின்றி ஒன்றிணைத்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில், அவர்களைப் பங்கு பெறச் செய்யும்படி ஊக்குவித்தார் என்பதாகும்.

நாவலரின் சீர்திருத்தப் பணிகளின் சிறப்புக் காரணமாக அவரது செயற்பாடுகளையிட்டு எவ்வித சமய சாதிய நம்பிக்கை சார்போ, பாரபட்சமோ இன்றி, இலங்கை நேசன், த. மோணிங் ஸ்ரார், தி. எக்ஸாமினர், கத்தோலிக்க பாதுகாவலன் போன்ற செய்திப் பத்திரிகைகள் யாவுமே கட்டுரைகளை வெளியிட்டன.

எனவே தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட பல்வேறு குழுக்களை, ஒரு, ஒருமித்த தனித் தமிழ்க் குரலாக ஒன்றிணைப்பதில் நாவலர் பங்களித்தார் எனக் கருதக் கூடியதாக உள்ளது.

அத்துடன் ருவைனத்தின் தவறான நிர்வாகத்தையிட்டு நாவலர் தேசாதிபதிக்கு முறையீடு செய்தமையும் ருவைனத்தின் விடயத்தை சட்ட நிருபண சபையில் எழுப்புவதற்கு மு. குமாரசுவாமியைத் தூண்டியமையும் தமிழ் மக்கள் சட்ட நிருபண சபையின் முக்கியத்துவத்தை அறிவதற்கும் அச் சபையில் தமிழரின் நலனைப் பிரதிநிதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணரவும் வழிவகுத்தமைக்குச் சிறந்த உதாரணமாகவும் முன்மாதிரியாகவும் நாவலரின் செயற்பாடுகள் உள்ளன.

இதன் பெறுபேறாக 1879 இல் மு.குமாரசுவாமியின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதில் தமிழர் அதிக கவனஞ் செலுத்தினர்.

நாவலர் பொதுவாக சமய சாதிய நம்பிக்கையென்ற விடயங்களைத் தமது சமூக செயற்பாடுகளில் கருத்துக்கு எடுக்காத போதிலும் சட்ட நிருபண சபைக்கு இந்துசமயப் பிரதிநிதியைத் தேர்வு செய்வதில் கவனமாக இருந்தால் போல் தோன்றுகின்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருது வழங்கும் விழாவில் அவமதிப்பு ஊடக ஆசிரியர்கள் நிகழ்வைப் புறக்கணிப்பு



(கொழும்பு)

இலங்கையில் முதன் முறையாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஜனாதிபதி ஊடக விருது வழங்கும் விழாவில் நடந்த முறைகேடுகளால் இந்த நிகழ்வை புறக்கணித்து பல ஊடக ஆசிரியர்கள் வெளியேறிச் சென்றனர்.

ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்ட, தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்படாத நிலையில், இந்த ஊடக விருது விழாவை புறக்கணிப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் அறிவித்திருந்தது.

அதேவேளை, இந்த விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாகவும் சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், நேற்று முன்தினம் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்த ஊடகங்களின் ஆசிரியர்கள் பலருக்கு உரிய மரியாதையும் அமர்வதற்கான ஆசனங்களும் வழங்கப்படவில்லை.

ஊடக விருது விழாக்களில் ஊடகங்களின் ஆசிரியர்களுக்கு முன்வரிசையில் ஆசன வசதிகள் செய்யப்படுவது வழக்கம்.

நேற்று முன்தினம் நிகழ்வில் பங்கேற்க ஊடக ஆசிரியர்களுக்கு சரியான இடம் ஒதுக்கப்படாமல், மாடத்தில் அமருமாறு கேட்கப்பட்டனர்.

இதனால் அதிர்ச்சியடைந்த ஊடக ஆசிரியர்கள் பலரும் நிகழ்வைப் புறக்கணித்து வெளியேறினர்.

இந்தத் தவறுகளுக்காக பின்னர் மன்னிப்புக் கோரியுள்ள ஊடகத்துறை அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, இதுபற்றி விசாரணைகள் நடத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தலை எதிர்நோக்கும் மாகாணசபைகள் அதிகரிப்பு!



(கொழும்பு)

தென் மாகாண சபை நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவுடன் கலைக்கப்பட்டுள்ளது.

அதற்கான வர்த்தமானி அறிவித்தலில் தென் மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னகோன் கையொப்பமிட்டுள்ளார்.

தென் மாகாண சபையின் பதவிக்காலம் நேற்று முன்தினம் 10 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது.

இதற்கமைய, தென் மாகாண சபையின் அதிகாரம் மாகாண ஆளுநர் கீர்த்தி தென்னகோனின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு, வட மத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு நிறைவடைந்ததுடன், வடமேல் மற்றும் வட மாகாண சபையின் பதவிக்காலம் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் நிறைவடைந்தது.

அத்தோடு மேல் மாகாணத்தின் பதவிக்காலம் எதிர்வரும் 21 ஆம் திகதி நிறைவடையவு ள்ளதுடன் ஊவா மாகாணத்தின் பதவிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நிறைவடையவுள்ளது.

மாகாண சபைகளின் பதவிக்காலங்கள் முடிவடைந்துவரும் நிலையில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு பல்வேறு தரப்பினராலும் தொடர்ந்தும் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரண்டு வீடுகள் தாழிறக்கம்



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோர்வூட் நகரின் விகாரைக்கு அருகிலுள்ள குடியிருப்புப் பகுதியில் தாழிறக்கம் ஏற்பட்டதில் அப்பிரதேசத்திலுள்ள இரண்டு வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நோர்வூட் பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக பிற்பகல் வேளையில் பெய்து வரும் மழை காரணமாகவே இத்தாழிறக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஒரு வீட்டில் இரண்டு அறைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, மற்றுமொரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது. அத்தோடு சுவர்களும் இடிந்து வீழ்ந்துள்ளன.

குறித்த சம்பவத்தில் உயிராபத்துகள் எதுவும் ஏற்படவில்லை எனவும், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் இப்பிரதேச கிராம உத்தியோகத்தர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1692

Search for people, places and things


### தினேஸ்

வட்ஸ் அப்ல வருசத்துக்கு வாழ்த்து சொல்லி மெசேஜ் எல்லாத்தையும் டிலீட் பண்ண சம்பளத்துக்கு ஆள்தான் வைக்கனும் போல...




### குமரன்

எல்லா மிருகங்களையும் கூட்டுக்குள் அடைத்த மனிதன்... கொசுவிற்குப் பயந்து வலைக்குள் புகுந்து கொண்டான்



### கஜன்

திருக்குறளை போர்ட்டுல எழுதிட்டு அவங்களே இதை எழுதினது யார்னு கேட்கிறாங்க



### ராஜன்

அப்பனின் சொத்தும் மாமனாரின் வரதட்சனையும் இல்லாமல் ஒரு ஆண் தன் மனைவியை காப்பாற்றுவான் எனில் அவனே ஆண்மகன்



### இனியன்




### ஈசன்

செய்தி: ஓயாத செல்போன் பேச்சு, மனைவியின் காதை அறுத்த கணவன். எங்க இருந்துடா உங்களுக்கெல்லாம் இம்புட்டு தைரியம் வருது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க.தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகாரம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்

## அஜித் பி.பெரேரா அறிவுறுத்து



(கொழும்பு)

அரசியலமைப்பினூடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தினூடாக பாதியாக குறைக்கப்பட்டுள்ளது.

ஆனால் நிறைவேற்று அதிகாரம் யாப்பிலிருந்து முழுமையாக அகற்றப்படவில்லை என்பதை அனைவரும்கருத்தில்கொள்ள வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை முழுமையாக நீக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாக அமைவதுடன் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான விஞ்ஞாபன வரைபின் போது நிறைவேற்று அதிகாரம் தொடர்பிலும் முக்கிய அவதானம் செலுத்தப்படலாம் என்று அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கவனத்தில் கொள்ளப்படுமா? என்பது தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அதிகாரம் அரசியலமைப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும். அந்த நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசிய கட்சி உள்ளது. நிறைவேற்று அதிகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் மாத்திரமே வினைத்திறன் மிக்க சகல சமூகத்தைச் சேர்ந்த மக்களுக்கும் ஏற்ற ஆட்சியை உருவாக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆசிரியை கருகிப் பலி!

(பிட்டுவகொட)

யக்கல, பிட்டுவகொட 5 ஆவது ஒழுங்கைப் பகுதியிலுள்ள, வீடொன்று முழுமையாக தீக்கிரையாகியதில் வீட்டினுள் இருந்த பெண் ஒருவர் தீயில் கருகி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் தீ விபத்தில் 78 வயதுடைய ஓய்வுபெற்ற ஆசிரியை உயிரிழந்துள்ளார். மின் ஒழுக்குக் காரணமாக இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் மின் ஒழுக்கு இருப்பதாக இதற்கு முன்னர் மின்சார சபைக்கு அறிவித்திருந்தபோதும் அது தொடர்பில் மின்சார சபையினர் கவனம் செலுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இச் சம்பவம் தொடர்பில் யக்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங்கை முதலீட்டுச் சபையின் புதிய தலைவராக மங்கள



(கொழும்பு)

இலங்கை முதலீட்டு சபையின் புதிய தலைவராக மங்கள பி.பீ.யாபா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் திருமதி சந்திரிக்கா விஜேரத்ன நியமிக்கப்பட்டுள்ளதோடு அவரும் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து ஜனாதிபதியிடமிருந்து தனது நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (இ-7)

# உள்நாட்டு விவகார அமைச்சை பொன்சேகாவுக்கு வழங்குமாறு ஜனாதிபதியிடம் ஐ.தே.க.பரிந்துரை

(கொழும்பு)

உள்நாட்டு விவகாரங்களுக்கான அமைச்சராக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமிக்குமாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பரிந்துரை செய்ய ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடந்த உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா உள்ளிட்ட ஆறு புதிய அமைச்சர்களை நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்ய ஐ.தே.க. ஏற்கனவே முடிவு செய்திருந்தது.



இதன்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஒதுக்க முடிவு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கு மேலதிகமாக, உள்நாட்டு விவகார அமைச்சுப் பதவியையும் வழங்க நேற்று முன்தின கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பயணமாக ஜப்பானுக்குச் செல்லும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பிய பின்னர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை இந்தப் பதவிக்கு நியமிக்குமாறு பரிந்துரைக்க தீர்மானித்துள்ளது.

அதேவேளை, உள்நாட்டு விவகார அமைச்சை பொறுப்பேற்கும் வரை, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அந்த அமைச்சைக் கணகாணிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு சரத் பொன்சேகாவுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். (இ-7)

# மதூஷை பழிதீர்க்கவே ரிஸ்கான் படுகொலை உண்மைகளை வெளியிட்ட கஞ்சிபான இம்ரான்

(கொழும்பு)

பிரபல பாதாள உலகக்குழுத்தலைவன் மாகந்துரே மதூஷை பழிதீர்க்கவே அவரது எதிரிகள் ரிஸ்கானை படுகொலை செய்ததாக கஞ்சிபான இம்ரான் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

டுபாயில் மாகந்துரே மதூஷுடன் கைதுசெய்யப்பட்டு அந்நாட்டு அரசால் அண்மையில் நாடு கடத்தப்பட்ட கஞ்சிபான இம்ரான், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

அதன் பின்னர் கடந்த திங்கட்கிழமை நீதிமன்றத்தில் அவரை முன்னிலைப்படுத்தியபோது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கஞ்சிபான இம்ரானை மூன்று மாதங்கள் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

அதற்கமைய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த விசாரணைகளின் போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் புதுக்கடை ட்ரொப் மீ வாடகை வாகன சேவையை ஆரம்



பித்த ரிஸ்கான் ஒரு அப்பாவி. அவரை வைத்து பணத்தை முதலிட்டு வர்த்தகமொன்றை ஆரம்பிக்க வேண்டாமென தான் மதூஷிடம் கூறியதாகவும் எனினும் அவர் அதை கேட்காமையால் இறுதியில்மதூஷை பழிதீர்க்க அவரது எதிரிகள் ரிஸ்கானைக் கொன்றதாக அவர் வாக்கு மூலம் வ்ழங்கியு ள்ளார்.

'கொத்த அசங்க' என்பவரே ரிஸ்கானைக் கொன்றார் என்றும் அவருக்கு தங்களுடன் பிரச்சினை இருந்ததென்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்தோடு ரிஸ்கானைக் கொன்றவரை கழுத்தை வெட்டி மதூஷ் கொலை செய்யப்போவதாக கூறியதுடன் அவ்வாறே அவர் செய்தார் என்றும் கஞ்சிபான இம்ரான் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் டுபாய் நாட்டுக்கு மதூஷை தானே வரவழைத்ததாகவும் தெரிவித்த கஞ்சிபான இம்ரான், டுபாயில் இலங்கை நண்பர்களை அழைத்து விருந்தை நடத்த வேண்டாமென தான் எச்சரித்ததாகவும் கூறியுள்ளார். எனினும் தனது பேச்சை அவர் கேட்கவில்லை என்பதோடு, தன்னையும்கட்டாயப்படுத்தி விருந்திற்கு அழைத்ததாகவும் இதன் பின்னரே தான் கைது செய்யப்பட்டதாகவும் அவர் விசாரணைகளின்போது தெரிவித்துள்ளார்.

டுபாயிலிருந்து பொலிஸ் அதிகாரிகள் பலருடன் பேசியமை குறித்தும் வாக்குமூலம் அளித்துள்ள கஞ்சிபான இம்ரான், தமக்கு எதிரான பாதாள உலகக் குழுவினருடன் தொடர்புகளை வைத்து தமக்கு எதிராக செயற்பட்டு வந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை இதன்போது எச்சரித்ததாகவும் கஞ்சிபான இம்ரான் விசாரணைகளின் போது தெரிவித்தார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 50 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 105 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 120 | 110 | 200 |
| தக்காளி | 100 | 80 | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 110 | 110 | 80 |
| கோவா | 60 | 60 | 60 | 50 | 80 |
| கரட் | 100 | 80 | 100 | 80 | 120 |
| பூசணி | 50 | 30 | 20 | 20 | 40 |
| புடோல் | 60 | 100 | 50 | 50 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 40 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 60-100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 90 | 85-90 | 100 |
| பாகற்காய் | 120 | 130 | 140 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 60 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 60 | 50 | 80 |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 | 90 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 80 | 120 |
| பீற்றூட் | 120 | 80 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 250 | 200 | 300 |
| போஞ்சி | 140 | 100 | 160 | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | — | 40 | 50 |
| கீரை-1பிடி | 40 | 25 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 200 | 140 | 170 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 40 | 30-45 | 30-50 |
| இராசவள்ளி | 150 | 150 | 140 | 130 | 120 |
| வெங்காயப்பூ | 200 | — | 160 | — | — |
| முள்ளங்கி | 80 | 80 | 60 | 30 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | — | 50 | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## கல்வி தந்த உயர்வு!



சித்தூர் மாவட்டத்தில் உள்ள சந்திரகிரி என்னும் ஊர், வரலாற்றுப் புகழ்பெற்ற நகரம். அந்நகரத்தைத் தலைநகராகக் கொண்டு, கர்நாடக நாட்டை ஆட்சி புரிந்த மன்னர்கட்குச், "சந்திரகிரி மன்னர்கள்' என்று பெயர். அம்மன்னர்களது ஆட்சியை, அவர்களுடைய அழிந்த கோட்டைகளும், அகழியும் நினைவுபடுத்துகின்றன. அவற்றைச் சார்ந்துள்ள மலைக்கு, "சந்திரகிரி' என்று பெயர். அந்த மலைச்சரிவில் அமைந்த தலைநகரும், சந்திரகிரி என்னும் பெயரையே பெற்றிருந்தது.

அந்நகரத்தில், நாகம்மாள் என்னும் பெண்மணி வாழ்ந்து வந்தாள். அப்பெண்மணி ஓர் அந்தணனின் மனைவி. நாகம்மாளின் நல்வினைப் பயனால், அவளுக்கு முதலில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பெற்றோர் அக்குழந்தைக்கு, "திம்மரசு' என்னும் பெயர் சூட்டி, அருமைமிகு வளர்ந்து வந்தனர்.

நாகம்மாள், அதன் பின்னர் பிறந்த ஓர் ஆண் குழந்தைக்கு கோவிந்தராசு என்னும் பெயரையும், பெண் குழந்தைக்கு கிருஷ்ணாம்பாள் என்னும் பெயரையும் சூட்டி மகிழ்ந்தாள்.

திம்மரசு, கோவிந்தராசு, கிருஷ்ணாம்பாள் ஆகிய மூவரும் சிறுவர்களாக இருந்தபோதே, அவர்களுடைய பெற்றோர் இறந்து விட்டனர். தாய்ப் பறவையை இழந்த, சிறகு முளைக்காத குஞ்சுகள் போலப் பிள்ளைகள் மூவரும் அல்லலுற்றனர்.

அவர்களுக்கு உண்ண உணவில்லை உடுத்த உடை இல்லை. அவர்கள் மிகவும் வறுமையில் வாடினர். உடன் பிறந்தாரைப் பாதுகாக்கும் பொறுப்பு திம்மரசுக்கு உரியதாயிற்று. திம்மரசு இளைஞர். அவர் என்ன செய்வார் பாவம்!

திம்மரசு வீடுதோறும் சென்று பிச்சை வாங்கி வந்து, தம்முடன் பிறந்தவர்களுக்குக் கொடுத்து, தாமும் உண்டு ஒருவாறு காலத்தைக் கழித்து வந்தார்.

திம்மரசு பிச்சை வாங்கச் செல்லும்போது, அவரது உள்ளம் உருகும் உடல் நடுங்கும் மென்மையான முகத்தில் துன்பம் தோன்றும் கண்களில் நீர் நிறைந்து வழியும் பிச்சை இடாதவரின் கடுஞ்சொல்லும், சுடுமுகமும், அவரது துன்பத்தை மேலும் மேலும் வளர்த்த வண்ணம் இருந்தன.

அந்நிலையில், திம்மரசின் பிஞ்சு உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றி, அவரை மிகவும் வருத்திக் கொண்டிருந்தது. "எப்படியாவது நாம் படித்துவிட்டால் இந்த இழி தொழிலை விட்டு விடலாம்!' என்று நினைத்தார்.

அந்த வருத்தத்தினிடையே திம்மரசு, "படித்தே யாக வேண்டும்' என்னும் முடிவைக் கொண்டார். உடனே அந்த ஊரில் இருந்த ஆசிரியரை அடைந்து, வணங்கி நின்று, "ஐயா! படிக்க வேண்டும் என்னும் விருப்பம் உண்டாகிறது. நான் எடுப்பதோ பிச்சை, உடுப்பதோ கந்தல் ஆடை. நீங்கள் அருள்கூர்ந்து அடியேனுக்குக் கல்விச் செல்வத்தைக் கொடுங்கள். உங்கள் பிள்ளைகளில் அடியேனும் ஒருவன்!" என்று கூறினார்.

அதைக் கேட்ட ஆசிரியர், தம் கையில் இருந்த பிரம்பைக் கீழே வைத்தார் சிறுவனாகிய திம்மரசை நோக்கினார். "சிறுவனே! உன் குறிக்கோள் மிகவும் உயர்ந்தது. அது எல்லாருடைய உள்ளத்திலும் உண்டாகிற அழுக்கில்லாத ஆசை. இங்குக் கிடைக்கும் பனையோலைகளே உனக்குப் பெருவாழ்வளிக்கும் பொன்னேடுகள்.

இப்பனையோலையில் எழுதி தருகிறேன். நீ படித்துக் கொள்!" என்று கூறினார்.

திம்மரசின் உள்ளம் குளிர்ந்தது முகம் மலர்ந்தது.

அன்றே திம்மரசு படிக்கத் தொடங்கினார். "இன்ன நேரத்தில் இன்ன வேலை செய்ய வேண்டும்' என்று ஒரு திட்டம் வகுத்துக் கொண்டார் முறைப்படி கடமை புரிந்தார்.

திம்மரசு தெலுங்கில் ஓரளவு அறிவு பெற்ற பின், வடமொழியையும் பயின்றார். அவர் இரு மொழிகளிலும் உள்ள இலக்கிய இலக்கணங்களை நன்கு பயின்றார்.

அதன் பின்னர், மனு முதலியோர் இயற்றிய பொருள் நூல்களையும், வியாசர் முதலியோர் இயற்றிய நீதி நூல்களையும், நீதி சாஸ்திர நூல்களையும் கற்றுப் பெரும்புலமை பெற்றார்.

திம்மரசு இரவு பகலாக இருபது வயது வரை கற்றார். கல்வியும், ஒழுக்கமும் அவருக்கு இரு கண்களாக இருந்தன. தமக்கு உண்டாகும் ஐயங்களைப் போக்கிக் கொள்ளவும், நூற்பொருளை அறிந்து கொள்ளவும் பலர் அவரது குடிசைக்குச் சென்றனர்.

உணவு தேடி வீடு வீடாகச் சென்ற திம்மரசை, பொருள் தேடி வந்து சேர்ந்தது. அவரது ஓலைக்குடிசை, உயர்ந்த மாளிகை ஆயிற்று. பின்னாளில் நாட்டின் முதல் மந்திரியாக உயர்ந்து பேரும் புகழும் பெற்றார்.

## அறிந்து கொள்வோம்

- உலக மக்களில் 40 சதவீதத்துக்கும் அதிகமானோர் தொலைபேசியைப் பயன்படுத்தியதே இல்லை!
- நெதர்லாந்தில் நீர் நிலைக்குக் கீழே சுரங்கக் கீழ் பாலம் அமைக்கப்பட்டு, போக்குவரத்து நடைபெறுகிறது.
- தொடர்ச்சியாக இயர் (ear) போன் அணிபவர்களின் காதில் பக்றீரியா வளர்ச்சி அதிகமாக இருக்கும். ஒரு இயர் போனை பலர் பயன்படுத்துகையில் ஒவ்வாமை ஏற்படவும் கூடும்.
- மனிதனின் விழிகள் சராசரியாக 180 டிகிரி வரை திரும்பும்.
- நத்தையின் மூளை நம்முடையதைப் போலவே நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது.
- ஆண் கொசுக்கள் கடிக்காது. பெண் கொசுக்கள்தான் கடிக்கும்.
- எருமை அளவு எடை கொண்ட ஆமைகள் கூட கடலில் உண்டு!



**ராமு :** என் பையன் வாங்கியிருக்கிற 98வீத மார்க்கைப் பார்த்தா மெடிக்கல் கிடைக்கும் போல தோணுது...!

**சோமு :** கவலையே படாதீங்க, கண்டிப்பா கிடைக்கும்ண்ணே!

**ராமு :** இப்ப ஒண்ணாவதுல வாங்கியிருக்கிற மார்க்கை தொடர்ந்து A/L வரை வாங்கணுமேனுதான் கவலையா இருக்கு...!

**சோமு :** ??????...

## விடுகதைகள்

- பச்சைபெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள். அது என்ன?

  வெண்டிக்காய்

- உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?

  வெங்காயம்

- வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி? அவள் யார்?

  முட்டை

- காதை திருகினால் பாட்டு பாடுவான்? அவன் யார்? உடம்பெல்லாம் பல் கொண்ட ஒருத்திக்கு கடிக்க தெரியாது?

  வானொலிப்பெட்டி

- மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன?

  மயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழலுக்கு இறைத்த நீர் போல.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# எந்தப் பிரயோசனமும் இல்லாத அபிவிருத்திக் குழுக்கூட்டம்

யாழ்.மாவட்டத்தில் இராணுவத்துக்கென காணிகள் எதனையும் சுவீகரிக்க முடியாது என யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த 8ஆம் திகதி யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் தலைமையில், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் இணைத் தலைவர்களாக இருந்த அந்தக் கூட்டத்தில் இராணுவ முகாம்கள் அமைப்பதற்கென பொது மக்களின் காணிகளை சுவீகரிக்க முடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட செய்தி ஊடகங்களில் வெளிவந்தபோது, இனிமேல் யாழ்.மாவட்டத்தில் படைமுகாம் அமைக்க காணி சுவீகரிப்பு இடம்பெறாது என மக்கள் நம்பினர்.

ஆனால் நேற்றைய தினம் மண்டைதீவில் தனியாருக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தை சுவீகரிப்புச் செய்யும் பொருட்டு நில அளவைத் திணைக்களம் அளவீடு செய்வதற்காக உரிய இடத்துக்கு வந்திருந்தது.

எனினும் ஊர் மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அரசியல் பிரமுகர்களும் ஒன்றுதிரண்டு காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்தினர்.

இதில் இன்னும் பலர் கலந்து கொண்டிருந்திருப்பர். ஆனால் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் படை முகாம் அமைப்பதற்கென காணி சுவீகரிப்புக்கு அனுமதியில்லை எனத் தீர்மானம் நிறைவேறியதன் காரணத்தால், இனிமேல் காணி சுவீகரிப்பு இடம்பெறாது எனப் பலரும் நம்பியிருந்தனர்.

இதனாலேயே அவர்கள் மேற்படி காணி சுவீகரிப்பு நடவடிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் போயிற்று.

ஆக, யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானம் படையினருக்கு காணி சுவீகரிப்பதை பொது மக்கள் தடுத்து விடக்கூடாது என்ற நோக்கத்தை கருத்தில் கொண்டு, எடுக்கப்பட்டதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது நேற்றைய தினம் மண்டைதீவில் படையினருக்கான காணி சுவீகரிப்பின் பொருட்டு அளவீடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதேநேரம் காணி அளவீட்டைத் தடுத்து நிறுத்துவதற்கான ஆர்ப்பாட்டத்துக்கு ஊர்ப் பிரமுகர்களும் மக்களும் தயாராக இருந்த வேளை, படையினருக்கென காணி சுவீகரிக்க முடியாது என்ற தீர்மானத்தை அறிவிக்கும் போது, இனி ஆர்ப்பாட்டம் தேவையில்லை என்ற முடிவுக்கே சம்பந்தப்பட்ட மக்கள் வர வேண்டியிருக்கும்.

ஆக, யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் தெளிவற்றது என்பதுடன் அந்தத் தீர்மானத்துக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அந்தத் தீர்மானம் அர்த்தமற்றதும் அதிகாரமற்றதுமாகும்.

அவ்வாறாயின் தீர்மானம் எடுக்கப்பட்டதன் நோக்கம் என்ன என்பதுதான் இங்கு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

எதுவாயினும் இப்படியான தீர்மானங்களை நம்பி எம் மக்கள் கருசனை அற்று இருந்து விடக்கூடாது என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# விசேட விடுமுறை

(யாழ்ப்பாணம்)

சிங்கள-தமிழ் புத்தாண்டினை முன்னிட்டு எதிர்வரும் திங்கட்கிழமை அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விடுமுறையானது வட மாகாண கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் உரித்தாகும் என்பதற்கான அனுமதி கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுத் தீர்மானத்துக்கிணங்க ஆளுநரால் வழங்கப்பட்டுள்ளதாக வட மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ம-3)

# யாழில் இராசவள்ளி, பப்பாசி செய்கையை ஊக்குவிக்க திட்டம்

## 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு

யாழ்.மாவட்டத்தில் இராசவள்ளி, பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்க 11 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். அஞ்சலாதேவி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அருகி வரும் இராசவள்ளிப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க 3 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்காக 10 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இப்பயனாளிகளைத்தெரிவு செய்வதற்காக மருதங்கேணி, உடுவில், தெல்லிப்பளை, கோப்பாய் பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

50 வீத மானிய அடிப்படையில் இராசவள்ளிக் கொடிக் கிழங்கு பயனாளிகளுக்கு வழங்கப்படுவதுடன் நீர்ப்பாசனத்துக்காக 75 வீத மானிய அடிப்படையில் சொட்டு நீர்ப்பாசன தொகுதியும் வழங்கப்படவுள்ளது.

பப்பாசிச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் 50 பயனாளிகளை இணைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு 75 வீத மானிய அடிப்படையில் பப்பாசி நாற்றுக்களும் சொட்டு நீர்ப்பாசனத் தொகுதியும் வழங்கப்படவுள்ளது.

எனவே இத் திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் பயனாளிகள் மாவட்ட விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

# சேவைநலன் பாராட்டு விழா

மாவிட்டபுரம் ஜே/231கிராம உத்தியோகத்தராக கடமையாற்றிய கே.அஜந்தனுக்கு சேவை நலன் பாராட்டு விழா இன்று 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் சி. நாகேஸ்வரன் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக் வலி. வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ. சுகிர்தன், சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி. சங்கீதாகோகிலதர்ஷன், கௌரவ விருந்தினர்களாக ஜே/231 கிராம உத்தியோகத்தர் ந.பிரஸாத், ஓய்வு நிலை கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளர் எ.சின்னத்தம்பி (ஜே.பி) ஆகியோர் கலந்து கொள்வர். (5)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நீயே அதுவாகும் வரை அனைத்து முடிவுகளும் எடு

நற்கூறுகள் (குணங்கள்) உனது இயல்பாகும் வரை அவற்றைப் பயிற்சி செய்யவேண்டும். நட்பு, கருணை, தியானம் ஆகியவை உனது இயல்பாகவே ஆகிவிட்டது என ந உணரும வரை அவறறைப பயிறசிகளாகத தொடர வேண்டும்.

எதைச் செய்தாலும் அதைச் செயலாகக் கொள்ளும் போது, அதில் உள்ள குறை என்னவென்றால், அதன் பலனை (விளைவை) நீ எதிர்பார்ப்பது தான். செயற்படுவது உனது இயல்பாகும் போது நீ பலனைக் கருத்திற்கொள்ளாது செயலைத தொடாநது செயது கொணடிருககிறாய.

ஒரு செயல் இயல்பாகவே உன்னிலிருந்து எழும்போது அது சோர்வையோ, ஏமாற்றத்தையோ தருவதில்லை. உதாரணமாக பல் துலக்குவதும் நீராடுவதும் செயல்களாகக் கருதப்படுவதில்லை. ஏனெனில் அவை உன்னுடைய வாழ்வில் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இவற்றை நான் செய்கின்றேன் என்ற எண்ணமின்றிச் செய்கிறாய். அது போல் சேவையை உனது சேவையின் ஒரு பகுதியாககும போது நான செயகிறேன எனற எணணமினறி சேவை நடைபெறுகிறது.

கேள்வி: கருணை, தியானம், சேவை இவை உனது இயல்பாகவே ஆகிவிட்டதை எப்போது உணர்கிறாய்?

ஸ்ரீஸ்ரீ: எபபோது அவைகளிலலாமல உனனால இருக்கமுடியாதோ அப்போது உலகிற்கு எடுத்துக்காட்டாக இருப்பதற்காகவே ஞானிகளுக்கு எந்தப் பயிற்சிகளும் இல்லாத போதும் கூட அவாகள தொடாநது தஙகள பயிற்சிகளைச் செயது வருகினறனா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த விலையிலேயே மின்சாரம் கொள்வனவு

இலங்கை மின்சார சபை, மின்சார அலகு ஒன்றை உற்பத்தி செய்ய மேற்கொள்ளும் செலவுடன் ஒப்பிடுகையில் குறைந்த விலைக்கே தனியாரிடமிருந்து மின்சாரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக மின்சக்தி எரிசக்தி மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் நிலவும் மின்சார நெருக்கடிக்கு பின்னணியில் ஊழல் அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்கள் சிலரும் இருப்பதாக நுகர்வோரின்உரிமைகள்அமைப்பு தெரிவித்துள்ளது. (ம)

# சைக்கிள் ஓட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரசடி வீதி, நல்லூரில் அமைந்துள்ள ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 71ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான 50 மைல் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணியளவில் இடம்பெறவுள்ளதாக சனசமூக நிலையத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-3)

# யாழ்.அரியாலைப் பகுதியில் கண் வைத்தியசாலை அமைக்க இரண்டரை ஏக்கர் காணி நன்கொடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலைப் பகுதியில் சுமார் 1000 மில்லியன் ரூபாய் செலவில் கண் வைத்தியசாலை அமைக்கத் தீர்மானித்துள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வட மாகாண மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு புலம்பெயர் நாட்டில் வாழும் பாலேந்திரா என்பவர் அரியாலைப் பகுதியில் உள்ள இரண்டரை ஏக்கர் காணியை கண் வைத்திய சாலைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இக்காணியில் அமையப் பெற இருக்கும் கட்டுமானம் தொடர்பிலான தொகை மதிப்பீட்டு முன்மொழிவை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

# இந்து சமய தத்துவங்கள் ஐநூறு

உபவாசத்தாலும் விரதத்தாலும் மனம் இறுகி பிறருடைய துன்பங்கண்டு இரங்குத் தன்மை போகும் என்ற கருதுவது பிழை.உபவாசத்தால் தூய்மை, ஒருமைப்பாடு, உடல் நலம் இவைகள் உண்டாகும். உபவாசத்தால் பட்டினியின் துயரம் நன்கு விளங்கும். இது போல்தானே உணவு கிடைக்கப்பெறாத ஏழைகள் பசியால் துயரம் அடைவார்கள் என்ற எண்ணம் நிச்சயமாக உண்டாகும். எனவே உபவாசத்தால் இரக்கம் விளையும்.

மகா சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி, கந்தர்சஷ்டி முதலிய விரத காலங்களில் விரதம் இருந்து மறுநாள் பாரணம் பண்ணும் போது பலருக்கு அமுது படைக்கின்றார்கள். இது இன்றும் நடைபெறுகிறது. பணக்காரனுக்கு எல்லா வசதிகளும் இருப்பதனால் அவனுக்குப் பசியே தெரியாது. அவன் உபவாசம் இருப்பதனால் பசியை அறிய முடிகின்றது. பசியை அறிந்து பசித்தோர்க்கு உதவும் பரிவு உபவாசத்தால் ஏற்படுகின்றது. ஆதலால் உபவாசம் சிறந்த சாதனமாகும்.

(தொடரும்)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஜாதக தோசம் நீங்க எந்தெந்த தெய்வத்தை வணங்க வேண்டும்?

**செவ்வாய்**

ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தோடு செவ்வாய் இருக்கும் பட்சத்தில் அவர்கள் முருகனை வணங்க வேண்டும்.

அதோடு தினமும் "ஓம் சரவணபவ" என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும்.

**புதன்**

ஒருவரது ஜாத்கத்தில் லக்னத்தோடு புதன் இருக்கும் படசததில அவரகள ஸரராமனை வணஙக வேணடும.

அதோடு தினமும் "ராம ராம ராம, ஓம் நமோ, பகவதே வாசுதேவாய" எனற மநதிரம ஜெபபபதன பயனாக ஜாதக தோஷங்கள் விலகும்.

**குரு**

ஒருவரது ஜாதகத்தில் லக்னத்தோடு குரு இருக்கும் படசததில அவரகள தடசிணாமூரததியை வணஙக வேண்டும்.

அதோடு தினமும் "ஓம் நமசிவாய" என்ற மந்திரத்தை ஜெபிப்பதன் பயனாக ஜாதக தோஷங்கள் விலகும்.

(தொடரும்)

# யாழ். பிரதேச செயலக அணியை வீழ்த்தி நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியன்



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக ஆண்கள் அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பழைய பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்.பிரதேச செயலக அணி மோதியது.

இரு அணிகளும் ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை சம பலத்துடன் மோதின. இருப்பினும் ஆட்ட நேர முடிவில் நல்லூர் பிரதேச செயலக அணி 70:68 என்ற புள்ளிகளைப் பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் 2 ஆவது சுற்றில் கிறாஸ்கொப்பர்ஸ்



கே.சி.சி.சி. வெற்றுக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் முதலாவது சுற்றில் 6 ஆவது போட்டி கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி, றெஜின்போ அணியை 48 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. மாதவன் - 77, வரலக்ஸன்-12,ரசிகரன்-13, பிரகலாதன்-48 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் கிருபா -4, நிஷாந்தன்-2, அனோஜன்-1 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெஜின்போ அணி 27.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பி.நிஷாந்-18, கிருபா-23, டிலேசியன்-13, செந்தூரன்-16, நிரோஜன்-21, றஜீவன் ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் ஜனுாஸன்-1, மதுாஸன்-2, கோகுலன்-1, கினுாஸன் -1, மதுாஸன்-2, கோகுலன்-1, கினுாஸன்-1, டிலோஸன்-2, சாந்தன்-1 இலக்கினை கைப்பற்றினர்.

2019 ஆம் ஆண்டுக்குரிய தரவரிசை பட்டியலுக்கு கிறாஸ்கொப்பர்ஸ் அணி 6.72 புள்ளிகளையும் றெஜின்போ அணி 2.66 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (கு)

# பிரதேச செயலகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டம் மகுடம் சூடியது யாழ்.பிரதேச செயலக அணி



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ். பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றினர்.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பழைய பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்திய யாழ். பிரதேச செயலக அணி ஆட்ட நேர முடிவில் 67:32 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது. (க-60)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழா மாபெரும் மரதன் ஓட்ட நிகழ்வு

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டு நிகழ்வுகளின் வரிசையில் நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்று சில்லு வண்டி ஓட்டம் என்பன நடைபெறும்.

போட்டிகள் புங்கன்குளம் சந்தியில் அமைந்துள்ள அரியாலை சனசமூக நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நிறைவடையும் என நூற்றாண்டு விழாக் குழு அறிவித்துள்ளது. (கு)

# கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரல்

வளர்மதி சனசமூக நிலையம் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு தென்மராட்சி ரீதியாக அணிக்கு 11 பேர் 10 பந்து பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டியினை நடத்தவுள்ளது.

போட்டியில் பங்கேற்க விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் 077 476 5965, 077 621 9803 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (க)

# கருகம்பனை தமிழ் மன்றத்தின் சித்திரைப் புத்தாண்டு நிகழ்வுகள்

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம் மற்றும் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் மாபெரும் சித்திரை விளையாட்டு விழா எதிர்வரும் இன்று காலை 5.30 மணியளவில் ஆண்களுக்கான வயதெல்லை யற்ற மாவட்ட ரீதியான மரத னோட்டப் போட்டி கருகம்பனை சந்தியில் நடைபெறவுள்ளது.

, தொடர்ந்து 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணி முதல் கருகம்பனை இந்து இளைஞர் விள்ளயாட்டுக்கழக மைதானத்தில் கலை கலாசார நிகழ்வுகளான தயிர்முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை, கயிறிழுத்தல், சறுக்கு மரம் ஏறுதல் போன்ற பல நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இரவு 8.30 மணி முதல் சுன்னாகம் பிரசாத்தின் சுருதிலயா இசைக்குழுவினரின் பிரமாண்ட இசை நிகழ்ச்சியுடன் வான வேடிக்கைகளும் இடம்பெறவுள்ளது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 புதிய அம்புல...

ரட்ன தலைமையில் நேற்று இடம் பெற்றது.

இவ் வைபவத்தில் யாழ் மாவட்டத்திற்கு 15 புதிய அம்புலன்ஸ் வண்டிகளும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 01. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 01. மன்னார் மாவட்டத்திற்கு 02 மாக வழுங்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்துக்கு வழங்கப்பட்ட 15 அம்புலன்ஸ் வண்டிகளும் யாழில் உள்ள பிரதேச, பிராந்திய வைத்தியசாலைகள் பதினைந்துக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. (ம-10)

## மண்டைதீவில்...

போராட்டத்தால் தடுத்து நிறுத்தப் பட்டது.

நேற்றுக்காலை 9.00 மணியளவில் மண்டைதீவு கிழக்கு அம்மன் கோவிலுக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கிழக்குப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் 18 ஏக்கர் காணியை ஆக்கிரமித்து அதில் முகாமிட்டுள்ளனர்.

குறித்த படைமுகாம் அமைந்துள்ள காணியை நிரந்தரமாக சுவீகரித்து படை முகாமை விஸ்தரிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் முதற்கட்டமாக குறித்த காணியை சட்ட ரீதியில் சுவீகரிப்பதற்கான முன்னெடுப்புக்களை கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்படி குறித்த காணிகளை சுவீகரிக்கப் போவதாகவும், அதற்கான நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாகவும் நில அளவை திணைக்களத்தினால் காணி உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப் பட்டிருந்தது.

குறித்த அறிவிப்பின்படி நேற்று வியாழக்கிழமை அக் காணிகள் நில அளவை செய்யப்படவுள்ளதாகவும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இந் நிலையில் காணி சுவீகரிப்புக்கான நில அளவை நடவடிக்கைக்கு எதிர்ப்புத்தெரிவித்து காணி உரிமையாளர்கள். அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள், அரசியல் பிரமுகர்கள் இணைந்து நில அளவையை தடுத்து நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தையடுத்து காணி சுவீகரிப்புக்காக நில அளவை செய்யவந்த நில அளவை திணைக்களத்தினர் நில அளவை செய்யாமல் திரும்பிச் சென்றனர். (இ-89)

## 8 கிலோ கஞ்சா...

விற்பனைக்கு தயார்நிலையில் இருந்த நிலையில் 8 கிலோ 200 கிராம் கஞ்சாவுடனே இளைஞர் ஒருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,10)

## நிதி அமைச்சர்...

இந்த நிலையிலேயே நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டுவரத் தீர்மானித்துள்ளனர். (ம-3)

# நாட்டை காட்டிக்கொடுத்து
# ஐ.நா வில் உயர் பதவி பெற மங்கள முயற்சி - திஸாநாயக்க

(கொழும்பு)

நாட்டை காட்டிக்கொடுத்து ஐக்கிய நாடுகளில் உயர் பதவியொன்றை பெற்றுக்கொள்ள மங்கள சமரவீர முயற்சித்து வருகின்றார். அதற்காகவே மனித உரிமை பேரவையில் எமக்கெதிரான பிரே



ரணையில் இருந்து வெளியேற சந்தர்ப்பம் கிடைத்தும் மீண்டும் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தார் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

புஞ்சி பொரளையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி பரிமாற்ற கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

மனித உரிமை மீறல் தொடர்பாக இலங்கைக்கு எதிராக அமெரிக்கா 2015ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தது. குறித்த பிரேரணைக்கு இலங்கையும் அனுசரணை வழங்குவதாக கைச்சாத்திட்டிருந்தது. என்றாலும் மனித உரிமை பேரவையின் நடவடிக்கைகளை விமர்சித்துக்கொண்டு அமெரிக்கா கடந்த வருடம் அதிலிருந்து வெளியேறியது.

இலங்கைக்கு எதிராக பிரேரணை கொண்டுவந்த நாடு மனித உரிமை பேரவையில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், குறித்த பிரேரணையை செல்லுபடியற்றதாக்கி எமக்கு அந்த பிரேரணையில் இருந்து வெளியேற சிறந்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

என்றாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளாமல் அமைச்சர் மங்கள சமரவீர, ஐக்கிய நாடுகளுக்கு சென்று பிரித்தானியா உட்பட சிறிய நாடுகளுடன் கலந்துரையாடி எமக்கெதிரான பிரேரணையை மீண்டும் கொண்டுவர நடவடிக்கை எடுத்தார்.

மேலும் வடக்கில் ஆரம்பத்தில் ஆயுத போராட்டம் ஆரம்பிக்கப் பட்டபோதும் அதற்கு எமது அண்மை நாட்டு நண்பர் ஆயுதம் மற்றும் பணத்தால் உதவியளித்ததுடன் ஆயுத பயிற்சிகளையும் வழங்கினார் என அவர் இதன் போது தெரிவித்தார். (ம-3)

## வரட்சியால் 5...

காரணமாக 5 லட்சத்து 67 ஆயிரத்து 618 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக சுத்தமான குடிநீரை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, களுத்துறை மாவட்டத்தில், இரண்டு லட்சத்து 81 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் சுத்தமான குடிநீரை பெற்றுக் கொள்ளும் சிக்கலுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

களுகங்கையில் கடல் நீர் கலக்கின்றமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வழக்கு சர்ச்சை...

அதன் பிரகாரம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரை வரவேற்பதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வருமாறு விஜத்கம என்ற அமைப்பு ஆதரவாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது தமிழரான றோய் சமாதானம் என்பவர் சார்பாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு மற்றும் அமெரிக்க சட்ட நிறுவனத்தால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் படுகொலை செய்யப்பட்ட, சண்டே லீடர் பத்திரிகை பிரதம ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்ரமதுங்கவினால் சிவில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டது.

ஏற்கெனவே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கோத்தபாய ராஜபக்ஷவை அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறக்குவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கு இரட்டை குடியுரிமை சிக்கல் இருப்பதால், அமெரிக்க குடியுரிமையை கோத்தபாய கைவிடுவது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு வந்ததாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில் கடந்த நாட்களில் அவருக்கு எதிராக இரு வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அடுத்த வேட்பாளர் பிரச்சினையில் மொட்டு கட்சி சிக்கித் தவித்து வருகின்றது.

இவ்வாறு தென்னிலங்கை அரசியல் பரபரப்படைந்துள்ள நிலையில் இன்று கோத்தபாய நாடு திரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பிரதேச செயலா...

தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. இதில் அபிவிருத்திகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

இதன்போது யாழ்ப்பாணத்திற்கு மண் தேவையை பூர்த்தி செய்ய கிளிநொச்சியிலிருந்து அதனை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

எனினும் இந்த விடயம் குறித்து பூநகரி அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே தீர்மானம் எடுக்க முடியுமென கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொது மக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர். (ம-3)

## பொதுஜன பெர...

வித்துள்ளார்.

திஸ்ஸமஹாராமவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றியா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமரவீர, எதிர்வரும் 10 ஆம் திகதியும் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளதால், அதில் எந்த தோல்வியும் இல்லை எனக் கூறியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் அல்லது நடைபெறவுள்ள தேர்தலை இலக்கு வைத்து பேச்சுவார்த்தை நடத்தப் படுகிறது. கூட்டணியாக போட்டியிட எதிர்பார்த்துள்ளோம்.

இந்த பேச்சுவார்த்தைக்கு ஜீ.எல்.பீரிஸ் கருத்து தடையாக இருந்தாலும் பொறுமையாக முன்னோக்கி செல்வதாகவும் இணைந்தால் வெற்றி பெற முடியும் எனவும் இல்லை என்றால் தோல்வி நிச்சயம் எனவும் மகிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# கோத்தபாய களமிறங்கினால் எமக்கு வெற்றி உறுதி
## ஐ.தே.கட்சி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கோத்தபாயவிற்கு எதிராக அமெரிக்காவில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குக்கும் எமக்கும் எந்த தொடர்பும் இல்லை, கோத்தபாய ராஜபக்ஷவை நெருக்கடிக்குள் தள்ளும் எந்த சூழ்ச்சியையும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்க வேண்டிய அவசியம் இல்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு எதிராக அமெரிக்காவில் தொடுக்கப்பட்டுள்ள சிவில் வழக்குகள் அந்நாட்டு பிரஜை ஒருவரால் தொடுக்கப்பட்டுள்ளது. அதுவும் அமெரிக்க பிரஜை ஒருவர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்காகும். ஆகவே இது குறித்து இலங்கை எந்த விதத்திலும் தொடர்புபடப் போவதில்லை.

ஐக்கிய தேசிய கட்சிக்கும் இந்த சம்பவங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. இலங்கையில் அவருக்கு எதிராக வழக்குகள் உள்ளன.

இவை அனைத்துமே சுயாதீனமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற காரணத்தினால் அவற்றில் எந்த தலையீடுகளும் இல்லாது நாம் செயற்பட்டு வருகின்றோம்.

அதேபோல் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளரா இல்லையா என்பது குறித்து மகிந்த ராஜபக்ஷவின் கூட்டணிக்குள் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப் படவில்லை.

அவ்வாறு அவர் களமிறக்கப் படுவார் என்றாலும் கூட அதனால் ஐக்கிய தேசிய கட்சிக்கும் எந்த பாதிப்பும் இல்லை. ஐக்கிய தேசிய கட்சி சார்பில் தகுதியான வேட்பாளர் ஒருவரை நாம் தெரிவு செய்து களமிறக்க தயாராக உள்ளோம்.

சிங்கள மக்களை மட்டுமேயல்லாது தமிழ் முஸ்லிம் மக்களையும் பாதுகாக்கும் வகையில் அவர்களின் ஆதரவையும் பெறும் வேட்பாளரை நாம் களமிறக்குவோம் என்றார். (ம-3)


கொவிசெத
திகதி 2019.04.11
சீட்டிழுப்பு இலக்கம் 2091
ஆங்கில எழுத்து B
வெல்லப்பட்ட இலக்கங்கள் 13 17 53 69
தேசிய லொத்தர் சபை

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1539
திகதி 2019/04/11
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 09 35 51 71
0124554

மஹஜன சம்பத
திகதி 2019/04/11
சீட்டிழுப்பு இலக்கம் 3895
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 4 5 3 8 4
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/04/11
சீட்டிழுப்பு இலக்கம் 536
லக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 25 56 57 61
தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 140 வருடங்களுு...

புவி வெப்பமடைதல் அதிகரித்துள்ள தோடு எல்னினோ காலநிலையும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய கடந்த 30 வருடங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கு, வடமேல், வடமத்திய மாகாணங்களுடன், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் வெப்பநிலையின் அளவு 3 முதல் 4 செல்சியஸ் அதிகரித்துள்ளது.

இதனுடன் நாட்டின் ஏனைய மாகாணங்களிலும் வெப்பநிலை அதிகரித்துள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் அத்துல கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நிலவும் வெப்ப காலநிலைக்கு அமைய உடலை குளிர்ச்சியான நிலையில் வைப்பதற்கு அவதானம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg

கனடா - 900 /=Kg

ஜேர்மனி - 700 /=Kg

நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-6068)

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

Registration starts now

Spoken English with Grammar

Diploma in English

BCHS

New Batches

British College of Higher Studies

Sirambiyady Lane, Jaffna.

0212224550 / 0761380202

(C-6068)


## ஹெரோயினுடன்...

புலனாய்வுப் பிரிவுடன் போதை ஒழிப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது நேற்று மதியம் கற்குழிப்பகுதியில் இளைஞர் ஒருவரிடமிருந்து 510 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளினை உடமையில் வைத்திருந்த குற்றத்திற்காக 23வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-250)

## புத்திஜீவிகளும்...

விரைவில் நாட்டில் அமுல்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதோடு, அது தொடர்பிலான உரையாடலொன்றினை அரசியல்வாதிகள், கல்விமான்கள், புத்திஜீவிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் ஆகியோரின் பங்குபற்றலில் நாட்டில் ஏற்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பாக நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இன்று பிள்ளைகளின் கல்வியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகள் இலக்குடன் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் ஏற்படுத்தப்பட்டுள்ள போட்டித்தன்மை எமது நாட்டு பிள்ளைகளின் கல்விக்கு சிறந்ததல்ல என்பதோடு, இந்நிலைமை பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதி விரைவில் மாற்றப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகள் மற்றும் சிறந்த பாடசாலைகள் போன்ற எண்ணக்கருக்களால் இன்று எமது பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளில் பாரியளவில் தாக்கம் ஏற்பட்டுள்ளதோடு, முறையான கல்வித்திட்டத்தின் ஊடாக சகல பாடசாலைகளையும் சிறந்த பாடசாலைகளாக மாற்றி அனைத்து பிள்ளைகளுக்கும் சம கல்வி உரிமையை பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஆசிரியர்களின் பிரச்சினைகள் காரணமாக கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் தொடர்பாக இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முறையான கொள்கையொன்றின் உருவாக்கம் தொடர்பில் விரைவில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார்.

பிரபல பாடசாலைகள் எண்ணக்கருவினால் பெருமளவிலான மாணவர்கள் கொழும்பு நகர பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவதனால் கொழும்பு நகரத்தில் வசிக்கும் பிள்ளைகளுக்கு பாடசாலை அனுமதி இல்லாது போகும் அசாதாரணமான சூழல் உருவாகியுள்ளதையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கல்வியில் ஏற்பட்டுள்ள போட்டித்தன்மை காரணமாக ஒரு பாடசாலைக்கு அதிகளவிலான மாணவர்கள் இணைத்து கொள்ளப்படுவதனால் கல்வித்தரம் மற்றும் ஒழுக்கத்துடன் கூடிய எதிர்கால தலைமுறையை கட்டியெழுப்புவதில் ஏற்படும் சவால்களையும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்து, அதற்காக முன்வைக்கப்படும் மாற்று செயற்திட்டம் தொடர்பில் இதன்போது கல்வியியலாளர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனெவிரத்ன, கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கல்வித்துறை சார் நிபுணர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-3)


காணி விற்பனைக்கு

பொன்னாலை வீதி, மானிப்பாய் மேற்கில் 2 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 275 6720

BCHS

Spoken Sinhala with Grammar

புதிய பிரிவுகள் ஆரம்பம்

சனி, ஞாயிறு மாலை 4 மணி

British College of Higher Studies

Sirambiyady Lane, Jaffna.

0212224550 / 0761380202

(C-6068)

கனடா மோகனின் இடியப்ப, முறுக்கு மெசின் இலங்கையிலும் பெற்றுக் கொள்ளலாம்



வீட்டு கையியக்க மெசின்



வர்த்தக கையியக்க மெசின்



வர்த்தக மின் (Automatic) இடியப்ப மெசின்

தொடர்புகளுக்கு : 076 796 6000 (இலங்கை), 4164336006 (ரொரன்ரோ கனடா)

www.StringhopperMachine.com

Email : mo@college.ca

(7939)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே

➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)

➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்



றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(8449)

வேலைவாய்ப்பு

உனக்குள் ஒரு தொழிலதிபர் மிக விரைவில் ஒரு மாற்றம்

உங்கள் வேலைக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லையா? முழுநேரமாகவோ/ பகுதி நேரமாகவோ எங்கள் நிறுவனத்தில் இணையுங்கள்.

வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் உங்கள் தரத்தினை உயர்த்திக்கொள்ள சர்வதேச நிறுவனமொன்றில் இணைந்து கொள்ள நல்லதொரு தருணமிது!!!



நிதி ஆலோசகர்

தகைமைகள்

- O/L 6 பாட சித்தி
- இல்லத்தரசிகள்
- ஓய்வூதியர்களுக்கான சந்தர்ப்பம் (முன்னுரிமை)



அனுகூலங்கள்

- சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு.
- எல்லையற்ற வருமானம்.
- ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டுப் பயணங்கள்.
- மேற்படிப்பிற்கான வாகன, வீட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவுகள்.

உங்களுடைய சுயவிபரக்கோவையை 2019/04/19 திகதிக்கு முன் கீழ்உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

NISHNA SHOP

K.K.S Road, Chunnakam.

(சுன்னாகம் கார்கில்ஸ் பூட் சிற்றி முன்பாக)

(8444)

விசேட வகுப்புக்கள்

சகல போட்டிப் பரீட்சைகளுக்குமான இவ்வார வகுப்புக்கள் சனி (13/4), திங்கள் (15/4) நடைபெறும்.

நேரவிபரங்களுக்கு:

0766883394

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் பஸ் நிலையத்திலிருந்து 100M தூரத்தில்)

அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Sunjeys A to Z Mart இல் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு 3000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு 10% கழிவு வழங்கப்படும். மேலும் 5000 ரூபாவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு (எமது நிறுவனத்தில் இருந்து 6km சுற்று வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு) வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

இச்சலுகை - 12.04.2019 - 20.04.2019 வரை மட்டுமே! மேலும் 3000 ரூபாயுக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு கொக்குவில் மஞ்சவனபதி தீர்த்த திருவிழாவின் போது (14.09.2019) மாலை 4 மணியளவில் சீட்டிழுப்பு இடம்பெறும்.



1-ம் பரிசு - எலக்ரிக்கல் மோட்டார் சைக்கிள்

2-ம் பரிசு - இரண்டு அடுப்பு கொண்ட ஹாஸ் குக்கர்

3-ம் பரிசு - ரைஸ் குக்கர்



ஆறுதல் பரிசாக 10 வெற்றியாளர்களுக்கு 500 ரூபாய் பெறுமதியான A to Z வவுச்சர் வழங்கப்படும்.

Sunjeys A to Z Mart (Pvt) Ltd

இல.100, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

021 205 3077, 0777 474 111

(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

SUNJEY'S HOLDINGS

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்



100% இயந்திர மோட்டார்

பெட்ரோல் தேவையில்லை. சூழல் மாசடையாது. எண்ணெய் மாற்றத் தேவையில்லை. புகை பரிசோதனை தேவையில்லை.

DESCRIPTION OF BIKE

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20 AH |
| Charging Voltage | AC 220V |
| Max Load | 120-140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost For One Full Charge | ONE UNIT |
| One Time Charge | 4-6 HRS |

WE ACCEPT VISA DEBIT & CREDIT

(C-6069)

(ஒரு முறை சார்ச்சுக்கு ஏறத்தாழ 40 கிலோமீற்றர்)

புதுவருடத்தை முன்னிட்டு

நம்பமுடியாத விலையில்

மாபெரும் விலைக்கழிவு

உங்கள் பணப் பையில் பணத்தை மேலதிகமாக சேமிக்க முடியும்

93,000/= பெறுமதியானதை 20.04.2019 வரை அல்லது கையிருப்பில் உள்ள வரை

ரூபாய் 85,000/= மட்டுமே!

இல. 98, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)

021 205 3077, 0777 474 111


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org